GOKULAM

கோகுலம்

செப்டெம்பர் 2002

ரூ.6/-




பூக்களுக்கு நிறம், மணம் எதற்கு? பக்.28





பொற்கோயில் பூமி

எந்த விலங்கு எந்த உணவைச் சாப்பிடும்?




விடை: 1-4, 2-3, 3-2,4-1





கிளி சுதந்திரமாகப் பறந்து செல்ல வழி காட்டுங்கள்!



வரைந்து பழகுங்கள்

''போட்டோ ஸ்டுடியோ ஆரம்பிச்சியே எப்படியிருக்கு?''

''நல்லா 'டெவலப்' ஆகுது.''

- ஜி. குப்புசாமி, சங்கராபுரம்




சாகாவரம்

கதை: ஆர். சாரதி
படம்: முத்து



செய்து பாருங்கள்

காற்றில் மிதந்து வரும் ஒலி!



ஒலியை நாம் காதுகளின் மூலம் உணர்கிறோம். அந்தக் காலத்தில் வெகு தூரத்தில் வரும் குதிரை வீரர்களைக் கண்டு பிடிக்க விநோதமான வழியைக் கையாண்டுள்ளனர். படுத்துக் கொண்டு தரையில் காதை வைத்து குதிரைகளின் குளம்பு ஒலியைக் கேட்டு, அவர்களின் வருகையை அறிந்து கொண்டனர். அவர்கள் ஏன் இப்படி செய்தனர்?

தேவையானவை: ஒரு சிறிய அலாரம் கடிகாரம், ஒரு மேஜை, ஒரு தம்ளர்.

1. அமைதியான அறையில் மேஜையின் மீது ஒரு கடிகாரத்தை வைத்து, 'டிக்... டிக்' ஒலி லேசாகக் கேட்கும் தூரத்தில் நிற்கவும்.
2. கைகளால் இரண்டு காதுகளையும் மூடுங்கள். ஒலியில் மாற்றம் தெரிகிறதா?
3. பிறகு ஒரு காதை மேஜையின் மீது படும்படி வைக்கவும். கடிகாரத்தின் ஒலி அதிகமாகக் கேட்கும்.
4. ஒரு தம்ளரை எடுத்து சுவற்றில் வைத்து, காதை தம்ளருக்குள் பொருத்துங்கள். அடுத்த அறையில் யாராவது பேசிக் கொண்டிருந்தால்கூட அதை நீங்கள் கேட்க முடியும். இது எப்படி?




காற்றின் மூலம் ஒலி பரவும்போது நம் காதுகளுக்கு வரும் முன்னரே ஒலி அலைகளின் மூலம் ஒரு பகுதி வேறு திசைகளில் போய் விடுகின்றன. ஆனால் மேஜையின் மூலம் கேட்கும் போதும், சுவற்றின் வழியே கேட்கும் போதும் ஒலி அலைகள் நேரடியாக வந்து சேருகின்றன. ஒலியானது காற்றைவிட திடப் பொருட்களின் வழியே நன்கு கடத்தப்படுகிறது.

கோகுலம்

மலர் : 20
இதழ் : 8

செப்டெம்பர் - 2002







கதைகள்:

படக்கதைகள்:

அறிவியல் :

வாசகர்களின் படைப்புகள் :

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை

அம்மா ராமுவை அழைத்தார். ''ராமு, நான் கடைக்குப் போயிட்டு வரேன். நீ மரகதத்தையும் வீட்டையும் பார்த்துக்க. எப்பொழுதும் போல் மரகதத்துடன் சண்டை போட்டுட்டு இருக்காதே'' என்றார். ராமு ஐந்தாம் வகுப்பு படிக்கிறான். மரகதம் முதல் வகுப்பு படிக்கிறாள். இருவருக்கும் இடையில் ஏதாவது ஒரு காரணத்திற்காக அடிக்கடி சண்டை வந்து விடும். அதைத் தீர்த்து வைப்பதற்குள் அம்மாவிற்குப் பெரும் பாடாகிவிடும்.

அம்மா கடைக்குச் சென்று சிறிது நேரம் ஆனது. ராமு அட்லஸை எடுத்து வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மரகதம் கையில் ஒரு பொம்மையுடன் ராமு அருகில் வந்தாள். அவளுக்குப் பல வண்ணப் படங்களுடன் அழகாக இருந்த அட்லஸைப் பார்க்க ஆனந்தமாக இருந்தது. மெதுவாக அட்லஸின் மேல் கை வைத்தாள்.

மரகதம் கையை வைத்தது ராமுவுக்குப் பிடிக்கவில்லை. அட்லஸ் மேல் இருந்த அவள் கையை வேகமாகத் தள்ளிவிட்டான் ராமு. மீண்டும் அட்லஸ் மேல் கை வைத்தாள் மரகதம். மறுபடியும் தள்ளினான் ராமு. இப்படி பல முறை இருவரும் மாற்றி, மாற்றி செய்தனர்.



விட்டுக் கொடுப்பதில் இன்பம்!

திடீரென்று மரகதத்துக்குக் கோபம் வந்துவிட்டது. அட்லஸைத் தூக்கி விட்டெறிந்தாள். உடனே ராமுவுக்கும் கோபம் வந்தது. மரகதத்தின் கையில் இருந்த பொம்மையை வாங்கி சுவற்றின் மேல் எறிந்தான். அவ்வளவுதான் பொம்மை சுக்கு நூறாக விழுந்தது. மரகதம் அழுது கொண்டே வாசலுக்குச் சென்றாள்.

அப்பொழுது அம்மா வீட்டுக்குள் நுழைந்தார். நிச்சயமாக ஒரு பெரிய சண்டை நடந்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டார் அம்மா.

ராமு அம்மாவிடம் வந்து ''எல்லாமே அவளால் வந்ததுதான். அவள் என் அட்லஸைத் தூக்கிப் போட்டாள். எனக்குக் கோபம் வரத்தானே செய்யும்? நானும் பொம்மையைத் தூக்கி எறிந்தேன். அது உடைஞ்சு போச்சு'' என்று தன் மேல் எந்தத் தப்பும் இல்லை என்று கூறினான்.



மரகதத்தைச் சமாதானப்படுத்தி விட்டு, ராமுவிடம் வந்தார் அம்மா. "ராமு, நீ தப்பே செய்யாதவனாக இருக்கலாம். ஆனால் மரகதம் உன்னை விட ஐந்து வயது சிறியவள். நீதான் விட்டுக் கொடுத்துப் போகணும். அவள் அட்லஸைத் தூக்கிப் போட்டாள் என்பதற்காக நீ பொம்மையைத் தூக்கிப் போட்டது சரியில்லை..."

"எனக்கு மட்டும் கோபம் வரக் கூடாதா?" என்றான் ராமு.

"நீ ஒன்றை நன்றாகப் புரிந்து கொள். விட்டுக் கொடுக்கிறது ஒன்றும் கோழைத்தனம் இல்லை. அதுக்கும் ஒரு மனம் வேணும். நீ விட்டுக் கொடுத்தால் அவளே தான் செய்தது தப்புன்னு உணர்வாள். ஒரு முறை விட்டுக் கொடுத்துப் பாரு. விட்டுக் கொடுப்பதில் உள்ள இன்பம் என்னன்னு உனக்குப் புரியும். சண்டையால் யாருக்கு லாபம்? போய் மரகதத்தைச் சமாதானப்படுத்து ராமு" என்றார் அம்மா.

ராமு சிறிது நேரம் யோசித்தான். அம்மா சொல்வதிலும் நியாயம் இருப்பதை உணர்ந்தான். மரகதம் இருந்த அறைக்குள் சென்றான். அவள் இன்னும் அழுது கொண்டிருந்தாள். மரகதத்துக்கு மிகவும் பிடித்த பொம்மையை அல்லவா உடைத்து விட்டோம் என்று ராமுவின் மனம் வருந்தியது.

சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. தான் பணம் சேர்த்து வைக்கும் உண்டியலை எடுத்தான். அதிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு போய் உடைந்த பொம்மையைப் போல் இன்னொரு பொம்மை வாங்கினான்.

மரகதத்திடம் பொம்மையைக் காண்பித்ததும் அவள் முகம் பிரகாசமானது. "தாங்ஸ் அண்ணா" என்றாள். அதைப் பார்த்த ராமுவின் மனம் மிகவும் சந்தோஷமடைந்தது. விட்டுக் கொடுப்பதில் உள்ள ஆனந்தத்தை முதன் முறையாக ராமு உணர்ந்தான்.

- பா. கவிதா, பன்னிரண்டாம் வகுப்பு, புதுடெல்லி.

தண்ணீர்... தண்ணீர்...



★ உலகின் மொத்த தண்ணீரில் 97 சதவிகிதம் கடல்களில் உள்ளது.

★ இந்தியாவில் வசிக்கும் ஜனங்களில் 60 சதவிகிதம் பேருக்குக் குடிக்க சுத்தமான தண்ணீர் கிடையாது.

★ மொத்தம் உள்ள வியாதிகளில் 65 சதவிகிதம் தண்ணீர் மூலம் பரவுகின்றன..

★ நேரடியாகப் பயன்படுத்த 1 சதவிகித தண்ணீர் மட்டுமே உள்ளது.

★ உயிர் பிறந்ததே முதலில் தண்ணீரில்தான்.

★ மழைத் தண்ணீரில் 10 சதவிகிதத்தை மட்டுமே இந்தியா பயன்படுத்திக் கொள்கிறது.

★ ஒரு மனிதனுக்குச் சாரசரியாக ஒரு நாளைக்கு 2 லிட்டர் தண்ணீர் தேவை.

★ மொத்த தண்ணீரில் 2 சதவிகிதம் பனிக்கட்டி.


★ தண்ணீரை மிக அதிகமாகப் பயன்படுத்தும் தொழில் விவசாயம்.

★ ஒரு கிலோ அரிசி உருவாக, 4,500 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது!

- வி.ஆர்.கிருத்திகா

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

ஒவ்வொரு மாதமும் இந்தப் போட்டி நடத்தப்படும். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். உங்கள் படிப்புக்குத் தேவையான புத்தகங்கள், சீருடை, பரீட்சை கட்டணம் போன்ற பயனுள்ளவற்றிற்குச் செலவிட்டுக் கொள்ளுங்கள். உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. **கடைசி தேதி 20.9.2002.**



8. இந்தப் படத்தில் உள்ளது என்ன?


இந்த மாதப் போட்டி :

பொருத்துக

1. விஸ்வேஸ்வரய்யா	கல்கத்தா
2. இத்தாலி	மாஞ்சிஃபெரோ இண்டிகா
3. மா	கயத்தாறு
4. கார்ல் லூயிஸ்	ஓட்டப் பந்தய வீரர்
5. டம் டம் விமான நிலையம்	ரோம்
6. கட்டபொம்மன்	பிருந்தாவனம்

7. சிறியதாக இருக்கும் சித்திரை கோபுரம்; கொத்தனாரோ, தச்சரோ கட்டாத கோபுரம் - அது என்ன?

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.




• குருநானக்



பஞ்சாப் என்பது இரண்டு பெர்ஷியன் வார்த்தைகளால் உருவான பெயர். 'பஞ்' என்றால் ஐந்து 'ஆப்' என்றால் தண்ணீர் என்று பொருள். பஞ்சாப் என்றால் ஐந்து நதிகள் பாயும் இடம். சிந்து நதியின் துணை ஆறுகளான ஜீலம், சீனாப், ராவி, பியாஸ், சட்லெஜ் ஆகிய ஆறுகள் பாயும் இடம் என்பதால் இந்தப் பொருத்தமான பெயர் ஏற்பட்டுள்ளது.

பஞ்சாப்பின் நாகரிகம் மிகவும் பழமையானது. பஞ்சாபி மொழி சமஸ்கிருதத்தில் இருந்து தோன்றினாலும் இந்திய – ஐரோப்பிய மொழிகளை உள்ளடக்கியது. பெர்ஷியன் மற்றும் லத்தின் மொழிகள் இதில் கலந்துள்ளன. கி.மு. 450ஆம் ஆண்டு அலெக்ஸாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார். பஞ்சாப் அரசன் போரஸ் தைரியமாக எதிர்த்துப் போர் புரிந்ததால் அலெக்ஸாந்தர் அவரின் தைரியத்தைப் பாராட்டி, நாட்டைத் திரும்பக் கொடுத்து விட்டார்.

கி.மு. 2000 முதல் 1500 வரையிலான கால கட்டத்தில் பஞ்சாப் மக்கள் மிகவும் உயர்ந்த நாகரிகத்தில் இருந்ததாக ஹரப்பா ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. செங்கலால் ஆன கட்டடங்கள், கழிவு நீர் வெளியேற்றம், தண்ணீர் வசதி, நீச்சல் குளம், துணிகள்,



• பாரம்பரிய உடை



பொன் விளையும்

கைவினைப் பொருட்கள் என அனைத்திலும் நவீன நாகரிகத்தை ஒத்திருந்திருக்கின்றனர்.

ஆரியர்கள் முதலில் பஞ்சாப்புக்கு வந்து தங்கி வேரூன்றிய பிறகுதான் இந்தியாவின் இதர பகுதிகளுக்குப் பரவினர்.

மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டது. கிழக்கு பஞ்சாப் இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. அதன் பிறகு பஞ்சாப்பிலிருந்து ஹரியானா என்ற மாநிலத்தைத் தனியாகப் பிரித்தனர். பஞ்சாப் – ஹரியானா இரண்டு மாநிலங்களுக்கும் சண்டிகர்தான் தலைநகரம்.

• பொற்கோயில்





பஞ்சாப்பில் மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு சீக்கியர்களின் ஆதிக்கம் தோன்றியது. 1849ஆம் ஆண்டு ரஞ்சித் சிங் சீக்கியப் பேரரசை நிறுவினார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தது. அப்போது

பூமி!





பஞ்சாப் முக்கிய மதத்தைத் தோற்று வித்த இடம். கிட்டத்தட்ட 500 வருடங் களுக்கு முன் குருநானக் சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தார். உலகில் உள்ள மதங் களுள் ஐந்தாவது பெரிய மதம் சீக்கியமதம். 20 கோடி மக்கள் இம்மதத்தில் உள்ளனர். சீக்கியர்களின் புனிதத்தலம் அமிர்த சரஸில் உள்ள பொற்கோயில். இக்கோயி வின் அடிப்பாகம் மார்பிளாலும், மேற் பகுதி முழுவதும் தங்கத்தாலும் உருவாக் கப்பட்டிருக்கிறது. இக்கோயில் மிகமிக அழகானது.

மஜ்ஹா, டோபா, மால்வா என்று பஞ்சாப் மூன்று பகுதிகளைக் கொண்டது.

நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்ற பஞ்சாப் இந்தியாவின் கோதுமைக் களஞ்சியமாகும். இங்கு விளையும் கோதுமை பளபளப்பாகப் 'பொன்' நிறத்துடன் காட்சி தருகின்றது. 'பொற்கோயில்', 'பொன் நிற கோதுமை' ஆகியவற்றால் பஞ்சாப்பை பொன் விளை யும் பூமி என்று அழைக்கலாம்.

இங்குள்ள மக்களுக்கு விவசாயமே முக்கியத் தொழில். பஞ்சாலைத் தொழிலும் சிறப்புற்று விளங்குகிறது. பால் உற்பத்தியிலும் பஞ்சாப் முன்னிலை வகிக்கிறது.

மூன்றாம் நூற்றாண்டிலேயே பஞ் சாபியர்கள் நாடோடிப் பாடல்களை இயற்றியுள்ளனர். குருநானக்கின் காலமே பஞ்சாபி இலக்கியத்தின் பொற்காலம் எனலாம். அப்போதுதான் ஏராளமானப் பாடல்கள், போர் சரிதை, ஆன்மிக முனி வர்களின் வாழ்க்கை வரலாறு, புராணங் கள் எல்லாம் உரை நடையில் எழுதப் பட்டன.


பஞ்சாபியர்களின் முக்கிய நடனங் களில் ஒன்று பாங்ரா. ஆரம்பத்தில் இந்நட



னம் பயிர்களின் அறுவடையின் போது ஆடப்பட்டது. தற்போது கல்யாணம், பிறந்த நாள், போட்டி என்று அனைத்து இடங்களிலும் ஆடப்பட்டுவருகிறது. 'கிதா' பெண்களுக்கான நடனம். இது தவிர ஜுமார், லட்டி, டாங்கரா, ஜுல்லி, சம்மி நடனங்களும் உண்டு.



• உருளை உற்பத்தி



• பாட்டியாலா அரண்மனை

பஞ்சாபி பெண்களின் பாரம்பரிய உடை சல்வார் கமீஸ். ஆண்கள் குர்தா - பைஜாமா அணிகின்றனர். சீக்கிய ஆண்கள் தலையில் தலைப்பாகை (டர்பன்) கட்டுகின்றனர்.

பஞ்சாபி மக்கள் மிகவும் கடுமையான உழைப்பாளிகள். அனைவரும் அவரவருக்குத் தெரிந்த தொழிலைச் செய்து வருகின்றனர்.

கிராமத்து வீடுகள் எளிமையாகவும் அதே சமயத்தில் தானியங்களைச் சேமித்து வைக்க வசதியாகவும் கட்டப்படுகின்றன.

இங்கு பஞ்சாபி மொழியைத் தவிர ஹிந்தி, ஆங்கிலம், உருது போன்ற மொழிகளும் பேசப்படுகின்றன.

வீரத்துக்கும், நேர்மைக்கும் பஞ்சாபியர்களை எடுத்துக் காட்டாகச் சொல்வார்கள். பஞ்சாப்பிலிருந்து பல தலைவர்கள் தோன்றியிருக்கின்றனர். பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய், பகத் சிங் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

பஞ்சாப்பில் சுற்றிப் பார்க்க நிறைய இடங்கள் உள்ளன. 350 அரிய பறவைகளைக் கொண்ட பறவைகள் சரணாலயம், பதிண்டா கோட்டை, மோதிபாக் அரண்மனை, ஜாலியன்வாலா பாக், பக்ரா அணை, பாட்டியாலா உயிரியியல் பூங்கா என்று ஏகப்பட்ட இடங்கள் உள்ளன.



• பாங்ரா நடனம்

அட்டையில் :
பிரப்ஜோத்சிங் ஜண்டு,
குர்மித்கௌர் சேத்தி

வண்ணப்படம்: ஸ்ரீஹரி

சிரித்து வாழ

பரிசு ரூ. 100/-

ஆசிரியர்: ராமு! ஏன் அழறே?

ராமு: நான் எப்பவும் கணக்குல நூற்றுக்கு நூறு வாங்குவேன் சார், இந்தத் தடவை 95தான் வாங்கியிருக்கேன்.

ஆசிரியர்: அட! அதுக்காகவா அழறே! நான் உன்னை நினைச்சு ரொம்பப் பெருமைப்படறேன்... அது சரி, கோபு நீ



எதுக்கு இப்படி வாயைப் பொத்திக்கிட்டுச் சிரிக்கிறே?

கோபு: நான் கணக்குப் பரீட்சையில் பதினைந்து மார்க் வாங்கியிருக்கேன்...

ஆசிரியர்: நீ உருப்படுவியா? ராமு 95 மார்க் வாங்கிட்டு அழறான்; நீ பதினைந்து மார்க் வாங்கிட்டு சிரிக்கிறியே!

கோபு: ஆமா சார்; இந்தப் பதினைஞ்சு மார்க்கை யாரு, எதுக்காகப் போட்டாங் கன்னு புரியலை, அதை நினைச்சா சிரிப்பு வந்துடறது!

— சே. கார்த்திக் ராஜா,
சென்னை

பரிசு ரூ. 50/-



"எதிர்த்தாடா பேசறே... ஓங்கி உதைச்சேன்னா சென்னையிலே போய் விழுந்திடுவே."

"கொஞ்சம் மெதுவா உதையேன், நான் திண்டிவனம்தான் போகணும்!"

— எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.

பரிசு ரூ. 25/-

"ஆங்கிலத்துல அந்த மாணவன் 'ஸ்டேட் பர்ஸ்ட்' வந்திருக்கான்!"


"தமிழ்ல.....?"

"தமிழ்ல சொன்னா, மாநிலத்துலேயே முதல் மாணவனா வந்திருக்கான்!"

— கே. மாரி, மயிலாடுதுறை.







பரிசு ரூ. 15/-

ஆசிரியர்: டேய், எதுக்குடா சென்டிமீட்டர்னு எழுதிட்டு சென்டியை அடிச்சே?

மாணவன்: நீங்கதானே சென்டிமீட்டரை, மீட்டரா மாத்தச் சொன்னீங்க.

- ஆர். தங்கராஜ், பெரிச்சிபாளையம்

''என்னப்பா சர்வர், இதோட சோத்துல ஏழு கல் வந்திருச்சப்பா?''

''இது அளவு சாப்பாடு சார். அவ்வளவுதான் போட முடியும்!''

— கு. பாலகிருஷ்ணன்,
பட்டுக்கோட்டை




கோல் போடும் டெண்டுல்கர்!


குளிர்பானம்!

56ஆம் ஆண்டு தேவகோட்டை கந்த சஷ்டியின் ஐந்தாம் நாள் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. பழ. கருப்பையா அவர்கள். 'யோசிக்கும் வேளையிலே' எனும் தலைப்பில் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சில் உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், அதனால் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மாற்றங்கள் என்று பல செய்திகள் அடுக்கடுக்காய் வந்து கொண்டிருந்தன. "ஒரு லிட்டர் பாலின் விலை 12 ரூபாய், ஒரு லிட்டர் தண்ணீரின் விலை 15 ரூபாய். பாட்டில்களில் அடைக்கப்பட்டுத் தண்ணீரும் சில வெளிநாட்டுப் பானங்களும் அதிக விலையில் விற்பனையாகி நம் நாட்டுப் பொருளாதாரத்தையே கெடுத்துச் சீரழித்துவிட்டன" என்று கடுமையாகக் கூறினார். "நாக்கில் வறட்சி ஏற்பட்டால் தண்ணீர் குடிக்கலாம். அது அவசியம். அதற்கு மாற்றாக செயற்கையாய்த் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பானங்களையா குடிப்பது?" என்று கோபத்தோடு வினவினார். அந்த நேரம் பார்த்து, அவர் அருந்துவதற்கு, மேடைக்கு ஒரு பானம் கொண்டு வந்து வைக்கப்பட்டது. அது வேறொன்றுமில்லை. பிரபல வெளிநாட்டு பானமாகிய 'ஸ்பிரைட்தான்'! கருப்பையா விற்கும் சிரிப்பு. அதைக் கண்டோருக்கும் சிரிப்பு!

- மு.ப. கௌதம் பாரதி, தேவகோட்டை








சர்ஜரி

எங்கள் அப்பா பிளாஸ்டிக் வாளியில் இருந்த ஒட்டையைப் பழைய டூத் பிரஷ்ஷை விளக்கில் காட்டி இளக வைத்து அடைத்துக் கொண்டிருந்தார். வெகு நேரமாக அவரைக் காணாததாலும் ஏதோ கெட்ட வாடை வீசியதாலும் அம்மா என் தங்கையிடம் "அப்பா என்ன செய்றாங்க?" என்று விசாரித்தார். அவள் உடனே "அப்பா பிளாஸ்டிக் சர்ஜரி பண்றாங்கம்மா" என்றதும் எல்லோரும் சிரித்து விட்டோம்!

- எஸ்.துர்கா காத்யாயனி, பதினோராம் வகுப்பு, புனித அலாய்சியஸ் ம.மே.நி. பள்ளி, தூத்துக்குடி

சரியா, தவறா?

டீவியில் வினாடிவினா பார்த்துக் கொண்டிருந்தோம். 'ஒரு மாநிலத்தின் முதல்வர் சட்டப்படி யாரால் நியமிக்கப்படுகிறார்?' என நிகழ்ச்சியை நடத்தியவர் கேட்க, என் அண்ணன் 'கவர்னர்' என ஆங்கிலத்திலும், 'ஆளுநர்' என நான் தமிழிலும் கூறினோம். டீ.வி. நிகழ்ச்சியில் பங்கு பெற்ற பெண்மணி 'ஆளுநர்' எனக் கூற நிகழ்ச்சியை நடத்தியவர். "சரியான விடை" என்றார். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இரண்டாம்







எங்கள் ஊரில் நடந்தது

வகுப்பு படிக்கும் என் தங்கை, "அக்கா நீ சொன்னதுதான் சரி, அண்ணன் சொன்னது தப்பு" என்றாளே பார்க்கலாம்! அனைவரும் சிரித்துவிட்டு, அவளிடம், "ரெண்டுமே சரிதாம்மா, அண்ணன் ஆங்கிலத்தில் சொன்னான், நான் தமிழில் சொன்னேன்" என்று விளக்கினேன்.

- ப. சௌந்தர்யா,
ஏழாம் வகுப்பு, பிரின்ஸ் மேல்நிலைப் பள்ளி,
மடிப்பாக்கம், சென்னை.

போன்

எங்கள் வீட்டிற்கு மாமா வந்தார். அவரிடம் என் அப்பா "வாடா ராமு, ரெண்டு மூணு தடவை போன் பண்ணிப் பார்த்தேன் நீ வீட்டில் இருந்த மாதிரி தெரியலையே" என்று விசாரித்தார். அதற்கு என் மாமா நகைச்சுவையாக, "போன் பண்ணிப் பார்த்தால் நான் வீட்டுல இருக்கிறது எப்படி தெரியும்? நேரில் வந்து எங்க வீட்டுக் கதவைத் திறந்து பார்த்தால்தானே நான் இருக்கிறது தெரியும்" என்றாரே பார்க்கலாம்!

- க. தனலட்சுமி,
ஒன்பதாம் வகுப்பு, மகளிர் தேசிய மேல்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை.

டெண்டுல்கர்...

உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளை ஒரு நாள் குடும்பத்துடன் அமர்ந்து டி.வி.யில் பார்த்து, ரசித்துக் கொண்டிருந்தோம். அப்போது என் அப்பா, "சின்னச் சின்ன நாடுகள் எல்லாம் ஃபுட்பால் சூப்பரா விளையாடறாங்க. இவ்வளவு பெரிய நாடான நம்ம இந்தியா, ஃபுட்பாலில் ஜொலிக்க முடியலையே..." என ஆதங்கப் பட்டார். உடனே என் பாட்டி, "ஆமாம்.. மத்த டீம்களில் எல்லாருமே நல்லா விளையாடறாங்க. நம்ம டீம்ல டெண்டுல்கர் ஒருத்தன் மட்டும்தான் நல்லா கோல் போடறான்... அப்புறம் எப்படி ஜெயிக்க முடியும்" என்றாரே பார்க்கலாம்! சிரிப்பலையில் தெருவே அதிர்ந்தது.

- ஆர். குட்டி பிரசன்னா, கரூர்.

பஸ் வருமா?

என் தம்பி வருண் இரண்டாம் வகுப்பு படிக்கிறான். ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு அப்பாவின் நண்பர் ஒருவர் வந்தார். அவர் அப்பாவிடம், "மதியம் சாப்பிட்ட பின் கீழச்சிவல்பட்டி செல்ல எத்தனை மணிக்கு பஸ் வரும்?" என்று கேட்டார். அருகிலிருந்த என் தம்பி, "மதியம் எத்தனை மணிக்குச் சாப்பிடுவீர்கள்? அதைச் சொல்லுங்க முதலில்" என்றான். நண்பர் சிரித்துக் கொண்டே "கேட்டானே, ஒரு கேள்வி. நீங்க எப்ப சாப்பாடு போடுவீங்கன்னு எனக்கு எப்படி தெரியும்?" என்றார்.

- நா. சிந்து, பதினோராம் வகுப்பு, அழகப்பா மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி, காரைக்குடி.



மன்மதனின் வீரம்; ரதியின் தந்திரம்!

ஒரு சமயம் மன்மதன் செய்த தவறுக்காக சிவபெருமான் கோபம் கொண்டு நெற்றிக் கண் திறந்து அவனைச் சுட்டெரித்து விட்டார்! ரதிதேவி, கணவனுக்காகப் பிரார்த்தித்தாள். சிவபெருமான் மனமிரங்கி, "கண்ணனுக்கும் ருக்மிணிக்கும் மகனாக மன்மதன் பிறப்பான்; அவனை நீ திரும்பவும் அடைவாய்" என்று அருளினார்.

அதன்படியே ருக்மிணி கல்யாணத்துக்குப் பிறகு, சில காலம் சென்று, பிரத்தியும்னன் பிறந்தான். கண்ணனும் ருக்மிணியும் மகிழ்ந்திருந்த வேளையில், சம்பராசுரன் என்ற அசுரன் பத்து நாள் குழந்தையை மாயையால் கவர்ந்து சென்று கடலில் எறிந்து விட்டான்! காரணம், கண்ணன் - ருக்மிணிக்குப் பிறக்கும் குழந்தையால் சம்பராசுரனின் மரணம் சம்பவிக்கும் என்று அவனுக்குச் சோதிடர்கள் கூறியிருந்தார்கள்.

குழந்தையை ஒரு மீன் விழுங்கி விட்டது! அந்தப் பெரிய மீனை ஒரு செம்படவன் பிடித்து சம்பராசுரனுடைய அரண்மனை சமையலறைக்கு விற்று விட்டான்! சமையல்காரன் மீனை வெட்ட, ஒளிமயமான குழந்தையைப் பார்த்து பயந்து விட்டான்.

அதே அரண்மனையில் மாயாவதி என்ற பெயரில் ரதிதேவி பணிப்பெண்ணாக இருந்து வந்தாள். அவளிடம் குழந்தையைக் கொடுத்து விட்டான் சமையல்காரன். மாயாவதிக்குக் குழந்தையைப் பார்த்ததுமே இவன் மன்மதன்தான் என்பது புரிந்து போயிற்று.

மாயாவதியின் அழகில் மயங்கி, சம்பராசுரன் அவளைத் தன் மனைவியாகும்படி வற்புறுத்தி வந்தான். ஆனால் மாயாவதி தந்திரமாக, தனக்கு ஒரு சாபம் இருப்பதாகவும், அதன்படி தான் மணக்கும் கணவன் தலைவெடித்து இறந்து விடுவான் என்றும் கூறி தப்பி வந்தாள்.

குழந்தை பிரத்தியும்னன் வேகமாக வளர்ந்து வாலிப வயதை அடைந்தான். அப்போது மாயாவதி அவனுக்கு உண்மைகளை உணர்த்தி, சம்பராசுரனை வெல்வதற்கான ரகசியங்களைக் கற்றுத் தந்தாள். அந்த உபாயங்களின் உதவியோடு கடும் போர் புரிந்து, பிரத்தியும்னன், சம்பராசுரனை வென்றான்.

பிரத்தியும்னனும் மாயாவதியும் ஆகாய மார்க்கமாக துவாரகையை அடைந்தனர். ருக்மிணியின் கால்களில் விழுந்து "தாயே" என்று பாசத்துடன் அழைத்தான் பிரத்தியும்னன். காணாமல் போன தன் குழந்தை கிடைத்ததில் ருக்மிணி பெருமகிழ்ச்சி அடைந்தாள்.

இந்தக் கதையில், மன்மதன் மறுபிறவி எடுத்தது; சம்பராசுரனை அவன் வதம் செய்தது ஆகியன ஒருபுறமிருக்க, ரதி எவ்வளவு சாமர்த்தியமாகச் செயல்பட்டிருக்கிறாள் பாருங்கள்! தன் எதிரியாகிய சம்பராசுரன் அரண்மனையிலேயே துணிந்து வசித்து, அவன் வற்புறுத்தலை ஏற்காதிருக்க தந்திரம் பேசி, அதே சமயம் அவனை வெல்வதற்கான உபாயங்களையும் உளவறிந்து கொண்டு, காலம் கனிந்த போது பிரத்தியும்னனுக்கு உதவியிருக்கிறாள்!

போரிலே வெற்றி பெற வீரம் மட்டும் போதாது; தந்திர உபாயங்கள், உளவுத் திறன் ஆகியவையும் வேண்டும். வீரத்துடன் விவேகமும் இணைந்தால் வெற்றி நிச்சயம்.

- ஆசிரியர்

கதை கதையாம் காரணமாம்...



மூக்கில் விரல் வைத்த காளி!

மாங்குளம் சின்ன கிராமம். அதிலே பர்வதம் தன் ஒரே மகன் மருமகளோடு வாழ்ந்து வந்தாள். பர்வதம் வீட்டுப் புறக்கடையில் ஒரு பெரிய பலாமரம் இருந்தது. அதன் சுளைகள் பொன்னிறத்தில் வெகு இனிப்பாக இருக்கும்.

ஒவ்வொன்றாய் பறித்துக் கொஞ்சம் கொஞ்சமாய் வெட்டி சுளையெடுப்பாள் பர்வதம். மகனுக்கு இரண்டு சுளைகள் கொடுத்துவிட்டு மீதியை விற்று விடுவாள். மருமகளைச் சுளையெடுக்கவே விடாதபோது தின்பதற்குக் கொடுப்பாளா?

ஒருநாள் மருமகளின் தோழி ஒருத்தி சுளைகளை விலைக்கு வாங்கி, மருமகள் மல்லிகா ஆற்றங்கரைக்கு வரும்போது அவளுக்குச் சாப்பிடக் கொடுத்தாள்.

அதை ருசி பார்த்த மல்லிகாவுக்கு ஒரு முழுப் பழத்தைச் சாப்பிட ஆசை பொங்கியது. ஒருநாள் மாமியார் பக்கத்து ஊரில் உள்ள உறவினர் ஒருவர் வீட்டு விசேஷத்துக்குச் சென்றிருந்தாள்.

மல்லிகாவுக்குப் பழைய அமுது இருந்ததால் சமையல் வேலையும் இல்லை. சாப்பிட உட்கார்ந்தவளுக்குப் புறக்கடையிலிருந்து 'சொத்'தென்று சத்தம் வந்தது. ஓடிப்போய்ப் பார்த்தாள். வீசிய பெருங்காற்றில் பழுத்த பழம் ஒன்று மரத்தோடு தனக்கிருந்த உறவை அறுத்துக் கொண்டு விழுந்திருந்தது. மல்லிகாவின் மகிழ்ச்சி சொல்லி முடியாது.

பழைய அமுதை மீண்டும் பாத்திரத்தில் எடுத்து வைத்து இடத்தைச் சுத்தம் செய்தாள். சாப்பிட்டு நேரத்தை வீணாக்குவதாவது! பலாச்சுளை சாப்பிட வயிற்றில் இடம் வேண்டுமே!

மாமியார் எடுப்பது போல் சுளைகளைப் பக்குவமாக எடுத்தாள். தோல், சகுணி இவற்றைக் கொல்லையில் குழி தோண்டி புதைத்து விடத் தீர்மானித்தாள். இந்தச்

மாலதி

சமயம் கதவு தட்டும் ஓசை கேட்டது. "யார்?" என்று கேட்டாள் மல்லிகா.

"நான்தான் உன் மாமியார் வந்திருக்கிறேன். சீக்கிரமாகக் கதவைத் திற" என்று குரல் கொடுத்தாள் மாமியார்.

மல்லிகாவுக்கு உடம்பு வெடவெடத்தது. பலாச்சுளைகளைப் பார்த்தால் என்ன சொல்வாளோ? என்று பயமாக இருந்தது.

அருகிலிருந்த குடத்து நீரைச் சாக்கடையில் கவிழ்த்தாள். அதற்குள் புதைக்க வைத்திருந்த தோல் குப்பையையும், சுளைகளையும் போட்டு மூடி இடத்தைச் சுத்தம் செய்தபின் கதவைத் திறந்தாள்.

"ஏன் இத்தனை நேரம்?" என்று சந்தேகத்தோடு கேட்டாள் மாமியார்.

"வழியிலே ஒரு பூனை. அதை விரட்டி விட்டு வந்தேன்" என்று சமயோஜிதமாகப் பதில் சொன்னாள் மல்லிகா. மல்லிகா பூனைக்குப் பயப்படுவது அந்த ஊருக்கே தெரியும்.

"நான் ஆற்றங்கரைக்குப் போய்விட்டு வருகிறேன்" என்று குடத்துடன் புறப்பட்





டாள் மல்லிகா.

"காலையிலே நான் போகும்போது குடம் நிறைய தீர்த்தம் இருந்ததே" மறுபடியும் சந்தேகப்பட்டாள் மாமியார்.

"அதிலே பல்லி விழுந்திருந்தது. கொட்டிட்டேன்" என்றபடி சிட்டாய் போய் விட்டாள் மல்லிகா.

ஆற்றங்கரையில் ஒரு புராதன காளி கோயில். கதவு கேட்பாரற்று திறந்து கிடந்தது. மதியம் இரண்டரை மணி ஆனதால் ஆள் நடமாட்டமில்லை. முதலில் எச்சரிக்கையாகக் குப்பைகளை அங்கிருந்த பள்ளத்தில் போட்டு மூடினாள். கைகளைக் கழுவிக்கொண்டு சுளைகளை மகிழ்ச்சியாகச் சாப்பிடத் தொடங்கினாள். "என்ன ருசி, என்ன ருசி" என்று சொல்லிக்கொண்டாள். முழுப் பழச் சுளைகளையும் திருப்தியாகச் சாப்பிட்டு முடித்தாள்.

பிறகு குடத்தைத் தேய்த்துக் கழுவி நீரை முகர்ந்து கொண்டு வீடு திரும்பி நிம்மதியாகத் தூங்கினாள்.

"என்ன இப்படி தூங்கிட்டிருக்கே? ஊரே அல்லோலகல்லோலப்படுகிறது. நாட்டுக்கு என்ன அனர்த்தம் நேருமோ என்று எல்லாரும் கவலையாயிருக்காங்க. வா, நாமளும் போய் பார்க்கலாம்" என்று இரைந்தாள் மாமியார்.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள் மல்லிகா. முகம் கழுவி திலகம் அணிந்து மாமியாரோடு கோவிலுக்குப் போனாள். காளியம்மன் மூக்கில் விரல் வைத்துக் கொண்டிருந்ததை ஊர் மக்களோடு அவளும் பார்த்தாள்.

அவள் தினமும் அம்மனைப் பார்க்கிறாள். இப்படி இல்லை. அவ்வளவு ஏன்? பலாச்சுளைகள் தின்னும்போது கூட பார்த்தாளே! 'இதற்கு என்ன அர்த்தம்? காளி எதற்காக மூக்கில் விரல் வைத்திருக்

கைக்கடிகாரங்கள் யாருக்கு?

ஜூலை இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டு சரியான விடைகளையும் அளித்திருந்தனர். எனவே பரிசுக்குரிய இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள்

டி. புதுமலர்,
பதினோராம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி,
மானாம்பதி, காஞ்சிபுரம் மாவட்டம்.

த. துர்கா கணேஷ்,
ஒன்பதாம் வகுப்பு,
நகர மேல் நிலைப்பள்ளி,
கும்பகோணம்.

சரியான விடை:

1) *ஆமேசான் - தென் அமெரிக்கா*
2) *வோல்கா - இரஷ்யா*
3) *மிசிசிபி - வட அமெரிக்கா*
4) *ஹுவாங்ஹோ - சீனா*
5) *கங்கை - இந்தியா*
6) *நைல் - ஆப்பிரிக்கா*

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

கிறாள்?' என்று யோசித்தாள்! 'தான் திருட்டுத்தனமாய் ஒரு முழு பலாப் பழத்துச் சுளைகளையும் தின்றதற்காகவா? இருக்காது. இந்த உலகத்து உயிர்கள் கடல் என்றால் நான் ஒரு துளி. எனக்காகவா இப்படி செய்திருப்பாள்?' என்று குழம்பினாள்.

''சரி, வா, வீட்டுக்குப் போவோம்'' என்று மாமியார் அழைக்கவும் பேசாமல் பின் நடந்தாள் மல்லிகா.

மன்னர் பரிவாரங்களோடு வந்தார். கூடவே ஜோதிடர்கள், மாந்த்ரீகர்கள், வேதியர்கள் அனைவரும் வந்தனர். கோவிலைச் சீர்திருத்திக் கட்டினான் மன்னன். நந்தவனம் அமைத்தான். கோபுரக்கலசம் பளபளக்க கும்பாபிஷேகம் நடத்தினான். யாக, ஹோமங்கள், அன்னதானங்கள் நடந்தன. வரிகளைக் குறைத்தான். ஆனாலும் அம்பாள் விரலை எடுக்கவில்லை!

''விரலை எடுக்க வைப்பவர்களுக்கு மாடி வீடும், நிலமும், நூறு பவுனும் அளிக்கப்படும்'' என்று முரசறையைச் சொன்னான்.

மல்லிகா வந்தாள். மன்னரிடம் தான் முயற்சி செய்வதாகக் கூறினாள். ''ஆனானப்பட்டவர்களாலேயே முடியாதபோது நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று கணவனும், மாமியாரும் தடுத்துப் பார்த்தனர். ஆனால் மல்லிகா பிடிவாதமாக இருந்தாள்.

மன்னர் அனுமதியுடன் கோவிலுக்குள் சென்று கதவை மூடித் தாளிட்டாள். கோவிலுக்கு வெளியே மன்னரும், ஊர் ஜனங்களும் ஆவலோடு கூடியிருந்தனர்.


''தாயே! உனக்குக் கோபுரத்தோடு கோவிலும், நந்தவனமும் அமையட்டுமே என்று காத்திருந்தேன். யாகம், அன்னதானம் எல்லாம் நடத்திக்கொண்டாய்! இது என்ன அதிசயம்? நீ பெண்ணாகப் பூமியில் பிறந்து பொல்லாத மாமியாரிடம் சிக்கிக் கொண்டால் ஓடிப் போயிருப்பாய்! மாமியாருக்குப் பயந்த மருமகளையும், மருமகளுக்குப் பயந்த மாமியாரையும் படைத்துவிட்டு, மூக்கில் விரல் வைத்தால் ஆயிற்றா? எலி - பூனை, பாம்பு - கீரி, மான் - புலி இது போலத்தான் மருமகள் - மாமியார்! எத்தனை சாமர்த்தியமாய் சமாளிக்கிறேன் என்று மகிழ்ந்து வரம் தர வேண்டாமோ? நீயாக மூக்கிலேயிருந்து விரலை எடுத்தால் அது உனக்குப் பெருமை! இல்லையானால் 'தினமும் எனக்குப் பூஜை வேண்டாம். வருடம் ஒருமுறை பூஜை போதும் என்று அம்பாள் காட்டும் சைகை!' என்று மன்னரிடம் சொல்லி விடுவேன். எப்படி வசதி?'' என்றாளே பார்க்கலாம்!

அம்பாள் வெடுக்கென்று கையை எடுத்துவிட்டாள். கதவைத் திறந்து கொண்டு வந்தாள் மல்லிகா. அம்மன் கை மூக்கின் மேலிருந்து விடுபட்டது கண்டு மன்னரும் மக்களும் அதிசயித்தனர்.

மன்னர் ''நீ என்ன சொன்னே?'' என்று கேட்டார்.

''இந்த ஊர் ஜனங்களுக்கு ஆளுக்கு ஒரு பவுன் தினந்தோறும் ராஜா கொடுப்பார்' என்றேன். அவ்வளவுதான், காளியம்மா மூக்கிலிருந்து விரலை எடுத்து விட்டாள்'' என்று மல்லிகா கூற, மன்னர் மயங்கி விழுந்தார்!

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. துருப்பிடிக்கக் கூடிய உலோகம் (4)
2. வாரத்திற்கு ______ நாட்கள் (2)
5. இறுதி என்பதை இப்படியும் கூறலாம் (3)
11. வயலில் நடந்து செல்லும் பாதை (4)
13. இதை உடைத்தால் மண் ஆகும் (2)
14. அரண்மனையில் அரசிக்கு உதவும் வேலைக்காரப் பெண்களை ______ என்று கூறுவர் (2)
15. கண்ணகியின் கையில் இது இருக்கும். (4)

விடை 64 ஆம் பக்கம்

வலமிருந்து இடம்

3. சூரியன் உதிக்கும் நேரம் (2)
4. சிரிப்பு (4)
8. நோயைக் குணப்படுத்த இது அவசியம் (4)
9. ஆண் யானைக்கு ______ உண்டு (4)
10. இந்திய அரசியலில் ஏராளமான ______கள் உள்ளன (3)


மேலிருந்து கீழ்

1. தாவரங்கள் இவற்றின் மூலம் உணவு தயாரித்துக் கொள்கின்றன (2)
2. எது? எப்படி? என்ன? எங்கே? போன்றவற்றில் ஒன்று விடுபட்டுள்ளது (2)
9. குயில் கூடு கட்டும் சரியா? (3)
10. நாரதர் ______ நன்மையில் முடியும் (4)
12. 'அழகு' என்பதை இப்படியும் சொல்லலாம் (2)

கீழிருந்து மேல்

5. வயிற்றில் உள்ள பையில் குட்டியைச் சுமக்கும் ஆஸ்திரேலிய பிராணி (4)
6. அபாயத்தைக் குறிக்கும் வண்ணம் (4)
7. நவராத்திரியின்போது முதல் மூன்று நாட்கள் இந்த அம்மனுக்காகக் கொண்டாடப்படுகிறது (3)
8. விவசாயிகளின் நண்பன் (4)
14. இடம் விட்டு இடம் அசையாத உயிரினம் (4)
15. பட்டாசு தயாரிப்புக்குப் பெயர் பெற்ற தமிழக ஊர் (4)
16. மூங்கில், கரும்பு முதலியவை ______ இனத் தாவரங்கள் (2)

**- எஸ். கவிதா, பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ ஜெயேந்திரர் வெள்ளிவிழா பள்ளி,
திருநெல்வேலி**




கேட்கட்டுமா டாக்டர்?

● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்

? வயிற்றுப் புண்ணைக் குணமாக்க உதவும் உணவுமுறைகள் பற்றிக் கூறுங்கள் டாக்டர்.

! அனைத்துத் தானியம் மற்றும் பருப்பு வகைகளையும் காய்கறிகளையும் நன்றாக வேகவைத்து சாப்பிட வேண்டும். கிழங்கு வகைகளையும் அசைவ உணவுகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும். வேக வைத்த முட்டையைச் சாப்பிடலாம். புளி ரசம் வேண்டாம்; தக்காளி ரசம் சாப்பிடலாம்.



காபி, தேநீர், கோகோ பானங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பால் சாப்பிடலாம். புளித்த மோர் மற்றும் தயிர் ஆகாது. புளிப்பான பழங்களைச் சாப்பிடக் கூடாது. வாழைப் பழம், ஆப்பிள் சாப்பிடலாம். நேரத்தோடு உணவு உண்ண வேண்டியது மிகவும் முக்கியம். அரைவயிற்றுக்கு உணவு உட்கொண்டால் போதும். பசிக்கும்போது மீண்டும் சாப்பிட்டுக் கொள்ளலாம். வயிற்றைக் காலியாகவும் வைக்கக்கூடாது. வயிறு முட்டவும் சாப்பிடக் கூடாது. உணவை நன்றாக மென்று மெதுவாகச் சாப்பிட வேண்டும். சாப்பிடும்போது அவசரமோ, ஆத்திரமோ, கோபமோ அடையக்கூடாது. சாப்பிட்ட பின் உடனே படுக்கக் கூடாது. தேவைப்பட்டால் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளலாம். அதிக சூடான உணவு, காரம் நிறைந்த உணவு, மசாலா கலந்த உணவு, எண்ணெயில் வறுத்த உணவு ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். புகை பிடிக்கக்கூடாது. மது அருந்தக்கூடாது.

● கவிமணி செந்தில், பாண்டமங்கலம்

? பகல் தூக்கம் உடலுக்கு நன்மையா? தீமையா?

! நல்லதுதான். மதியம் சாப்பிட்ட பிறகு சிறிது நேரம் கண்ணயர்வது உடல் திறனை அதிகரிக்க உதவுகிறது. தூங்காமல் தொடர்ந்து பணி செய்பவர்களை விட, சிறிது நேரம் தூங்கி ஓய்வெடுத்தவர்கள் சுறுசுறுப்பாகவும் தெளிவாகவும் பணி புரிய இயலும் என்பது பல ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

● ச. ஜெகதீஷ், சென்னை - 45.

? ஒரு சிலருக்கு மட்டும் ஆறு விரல்கள் இருப்பது ஏன்?

! இது பரம்பரைக் கோளாறு காரணமாக ஏற்படுகின்ற ஒரு பிறவிக் குறைபாடு. பெற்றோரின் மரபணுக் கோளாறுதான் இதன் அடிப்படைக் காரணம். ஆகையால், பெற்றோருக்கு இக் குறைபாடு இருந்தால் குழந்தைக்கும் இது ஏற்படலாம். தாயின் கருப்பையில் குழந்தை வளர்ச்சி பெறும்போது விரல்களை உருவாக்கும் மரபணுக்கள் ஐந்துக்குப் பதிலாக ஆறு என்று தப்பாகக் கணக்


அம்னீசியா என்றால் என்ன?



டாக்டர் கு. கணேசன்

குப் போட்டு விடுகிறது. இதன் விளைவாகக் கூடுதலாக ஒரு விரல் உருவாகி விடுகிறது.

● **எஸ். நாகராஜன், மேலப்பாதி**
? சிலருக்குக் கண்களைச் சுற்றிக் கரு வளையம் ஏற்படுகிறதே... ஏன் டாக்டர்?



! கண்ணிற்குக் கீழே உள்ள தோலில் 'மெலனின்' (**Melanin**) எனும் நிறமிகள் அளவிற்கு அதிகமாகப் படிவதால் கரு வளையம் விழுகிறது. தைராய்டு இயக்கு நீர்க் குறைபாடுகள் காரணமாக இது ஏற்படலாம். மேலும் நீண்ட நேரம் கண் விழித்துப் படித்தல், தூக்கம் கெடுதல், மன அழுத்தம் ஆகிய காரணங்களாலும்



இவ்வாறு ஏற்பட வழியுண்டு. தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கண்ணாடி அணிந்து வருபவர்களுக்குக் கண்ணாடி ஃபிரேம் அழுத்திக் கருவளையம் உண்டாகலாம். கருவளையத்தைப் போக்க மருந்து உள்ளது. தோல் மருத்துவரிடம் நேரில் ஆலோசனை பெற்றால் தீர்வு கிடைக்கும்.


● **டி. பரதன், மன்னார்குடி**
? 'அம்னீசியா' என்றால் என்ன டாக்டர்?

? 'அம்னீசியா' (Amnesia) என்பது மறதி நோயைக் குறிக்கும். சொல்வழக்கில் இதனை 'ஞாபக மறதி' என்று கூறுவார்கள். பார்த்ததை, கேட்டதை, பேசியதை, நிகழ்ந்ததை, நுகர்ந்ததை, தொட்டதை, எடுத்ததை, வைத்ததை இப்படி எதை வேண்டுமானாலும் மறந்து விடும் நிலையை அது குறிக்கிறது. முதுமை இதற்கு முதற்காரணம். மூளையில் ஏற்படும் கட்டி, மூளைக் காய்ச்சல், வலிப்பு நோய் ஆகியவற்றாலும் இது உண்டாகலாம். அளவிற்கு அதிகமாக மது அருந்தும் பழக்கம், சத்துக் குறைவு, அதிகமாகக் கண் விழித்தல், மூளைக்குத் தேவையான ஓய்வின்மை, மன அழுத்தம், மனச் சோர்வு போன்ற மனம் சார்ந்த நோய்கள் ஆகிய



வையும் இதற்குக் காரணமாகலாம். தலைக்கு ஏற்படும் விபத்துகள் மூலமாகவும் மறதி நோய் உண்டாகும். விபத்தில் மூளைக்கு அதிர்ச்சி ஏற்படுவதால் மறதி உண்டாகிறது. இதில் இரு வகைகள் உள்ளன. விபத்துக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகள் எல்லாமே மறந்து விடுவது ஒருவகை. விபத்திற்குப் பின்பு நடந்த நிகழ்ச்சிகள் எல்லாமே மறந்து விடுவது மற்றொரு வகை. சிலருக்கு எல்லாமே அரைகுறையாக மறந்துவிடும். இந்த நோய்க்கு நரம்பியல் மற்றும் உளவியல் சிகிச்சை முறைகளால் நிவாரணம் பெற இயலும்.

புதிர் உலகம்



I. உங்கள் வயதை நீங்கள் சொல்லாமலே என்னால் கண்டுபிடிக்க முடியுமே. எப்படி?

முதலில் நீங்கள் பிறந்த மாதத்தின் எண்ணை உங்கள் மனதில் நினைத்துக் கொள்ளுங்கள் (அதாவது ஜனவரி என்றால் 1, பிப்ரவரி என்றால் 2 அதுபோல). பிறகு நீங்கள் பிறந்த மாதத்தின் எண்ணை 2ஆல் பெருக்குங்கள். வரும் விடையை ஐந்தோடு கூட்டிக் கொள்ளுங்கள். அதை 50 ஆல் பெருக்கிக் கொள்ளுங்கள். அதனுடன் உங்கள் வயதைக் கூட்டுங்கள். அதிலிருந்து 250ஐ கழியுங்கள். இப்பொழுது உங்களுக்கு ஒரு மூன்று இலக்க எண் கிடைக்கும். அதில் முதல் எண் நீங்கள் பிறந்த மாதம். அடுத்த இரண்டு எண்கள் உங்கள் வயது. சரிதானே!

உதாரணம் : உங்கள் பிறந்த மாதத்தின் எண் 1, உங்கள் வயது 10 என்றால் ...

1	x	2	=	2
2	+	5	=	7
7	x	50	=	350
350	+	10	=	360
360	-	250	=	110

1 ஜனவரி, 10 உங்கள் வயது.

- பா. கவிதா, பன்னிரெண்டாம் வகுப்பு, புதுடெல்லி

II. 111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999 ஆகிய எண்களை ஓர் எண் மீதமில்லாமல் வகுக்கும். அதே நேரத்தில் வேறு எந்த எண்ணாலும் அந்த எண்ணை மீதமில்லாமல் வகுக்க முடியாது. அந்த எண் எது கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

- ச. சித்ரா, சென்னை

III. ஒரு புதை பொருள் ஆராய்ச்சியாளர் கி.மு. 649 என்று பொறிக்கப்பட்ட வெள்ளிக் காசுகள் சில தம்மிடம் இருப்பதாகச் சொல்கிறார். அவரை நம்பலாமா? கூடாதா?

உலகிலேயே உயரமான அருவி எது?

IV. தமிழ் வகுப்புக் நடந்து கொண்டிருந்தது. அப்போது வினோ, "உலகிலேயே நயாகரா தான் மிகவும் உயரமான அருவி" என்றான். மனோ, "உலகிலேயே நயாகராதான் மிகவும் உயரமான நீர்விழ்ச்சி" என்றான். மினுவோ, "உலகிலேயே நயாகராதான் மிகவும் உயரமான நீரொழுக்கு" என்றாள். இந்த மூன்று பேரில் யாருடைய வாக்கியத்தை தமிழாசிரியர் சரியென்று கூறியிருப்பார்?

- எம். வினோத், விருத்தாசலம்


V. என் மாமாவிடம் வயதைக் கேட்ட போது அவர் தன்னுடைய வயதை 6ஆல் வகுத்தால் மீதி 5ம், 5ஆல் வகுத்தால் மீதி 4ம், 4ஆல் வகுத்தால், 3ம், 3ஆல் வகுத்தால் மீதி 2ம், 2ஆல் வகுத்தால் மீதி 1ம் வரும் என்றார். அப்படியானால் அவருடைய வயதென்ன?


- நெ. இராமன், சென்னை

விடை 64ம் பக்கம்

நாய் மனிதனுக்கு நண்பனானது எப்படி?

வேணுவாரியத்
வி.எஸ்.சஜீவன்





எங்களை எல்லாம் உங்கள் கிராமத்துக்கு அழைத்துச் சென்று விடுங்கள்.
தாராளமாக வரலாம். ஆனால் உங்களுக்கு ஏதாவது வேலை தெரியுமா?
நான் உங்களைச் சுமந்து செல்வேன்.
நானும் நிறைய சுமைகளைச் சுமப்பேன்.
நானும் அப்படியே செய்வேன்.
நான் என்ன செய்வது? எனக்கு எந்த வேலையும் தெரியாதே. என்னால் குரைக்கத்தான் முடியும்.
உங்கள் எல்லோருக்கும் வேலை தெரிந்திருக்கிறது. சரி, என்னுடன் புறப்படுங்கள்.
அப்பாடி! இனி நமக்கெல்லாம் பாதுகாப்பு கிடைச்சாச்சு.
குதிரை, கழுதை, மாடு, நாய் எல்லாம் பயணம் செய்ய ஆரம்பித்தன.
நாயே, நீ என்னுடன் வர வேண்டாம். உனக்கு எந்த வேலையும் தெரியாது.



saifeatures@yahoo.com www.kuttu.com

பூக்களுக்கு நிறம், மணம் எதற்கு?





நிறம், மணம், அழகு என அனைத்து அம்சங்களிலும் நம் மனதைக் கொள்ளை கொண்டு விடுகின்றன பூக்கள். நம் கண்களுக்கு விருந்து படைக்கவா தாவரங்கள் பூக்கின்றன? இல்லை. தங்கள் சந்ததிகளைப் பெருக்கிக் கொள்ள உதவி செய்யும் விதமாகத்தான் கண்கவர் வண்ணங்களில் பூக்கின்றன. பூக்கள் பல வண்ணங்களில், அருமையான மணத்துடனும், தேன் சுரந்தும் காணப்படுவது மகரந்தச் சேர்க்கையை நடத்துவதற்காகத்தான். இது நடந்தால் தான் கருவுருதல் ஏற்பட்டு








மோகனா














காய், கனி உண்டாகி அதன் விதைகள் அடுத்த சந்ததிக்கு வித்தாக அமையும்.

மலரின் நடுவிலுள்ள பெண் சூலகத்தின் சூல் முடியில், ஆண் மலரின் மகரந்தத் தூள் அமர்கிறது. பிறகு சூல் குழாய் வழியே பயணம் செய்து சூலகத்தை அடைவதையே மகரந்த சேர்க்கை என்கிறோம். இச் செயல் நடைபெற காற்று, நீர், பறவைகள், பாலூட்டிகள் மற்றும் பூச்சிகள் அனைத்தும் உதவுகின்றன.

பெரும்பாலும் பூச்சிகள்தான் மகரந்தச் சேர்க்கைக்குப் பேருதவி புரிகின்றன. அதிலும் தேனீக்களின் பங்கு மிகவும் அதிகம். பூச்சிகள் மலருக்கு உதவி செய்ய பூக்களை நாடுவதில்லை. தங்களின் உணவான மகரந்தம், தேன் முதலியவற்றை உண்ணவே பூச்சிகள் மலர்களை நாடுகின்றன.

பகலில் பூக்கும் பூக்கள் ரோஜா, செம்பருத்தி, செவ்வந்தி, சாமந்தி, பூவரசம்பூ, ஆகாயத் தாமரை போன்றவை தேனற்றதாய் இருந்தாலும்



இந்தியாவின் முதல் தேசப் படம் 1752ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்திய தேசப் படத்தை முதலில் தயாரித்தவர் ஓர் இந்தியரல்லர். ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த அன்விலி என்பவர்தான்.

- பி.ராஜசேகரன்

பகட்டான நிறத்துடன் காட்சியளித்துப் பூச்சிகளை ஈர்க்கின்றன. தேனீக்களுக்குச் சிவப்பு நிறம் பிடிக்காது. ஆனால் மஞ்சள், ஆரஞ்சு, பச்சை, நீலம் போன்று மற்ற வண்ணங்களை நாடிப் போகின்றன. மனிதக் கண்ணுக்குத் தெரியாத புற ஊதாக் கதிர்களின் நிறங்களையும்கூட பூச்சிகளால் காண முடியும்.

வண்ணத்துப் பூச்சிக்குச் சிவப்பு நிறம் என்றால் ரொம்ப இஷ்டம். தேனின் சுவை கூட பூவுக்குப் பூ வித்தியாசப்படுகின்றது. பூக்கள் பொதுவாகக் கறுப்பாக இருப்பதில்லை. ஏனெனில் கறுப்பை பூச்சிகளால் இனம் காண முடியாது.

பூக்கள் அளவில் சிறியதாய் தும்பைப்பூ, வேப்பம்பூ, முருங்கைப் பூ போல் இருந்தால் அவை கொத்து கொத்தாய் பூக்கும். அப்போதுதான் அவை எளிதில் பூச்சிகளின் கண்ணில் படும். மலர்களின் மணம் பூச்சிகள், வௌவால்களை வெகு தூரத்தில் இருந்தே கவர்ந்திழுக்கிறது.

பொதுவாக இரவில் பூக்கும் பூக்கள் வெள்ளையாகவும் அதிக மணத்துடனும் இருக்கின்றன. மல்லிகை, முல்லை, ராமபாணம், பிச்சி போன்றவை இரவில் மலரும் பூக்களே! வெள்ளை நிறமும் அதன் மணமும் தான் பூச்சிகளுக்கு எளிதில் அடையாளம் காட்டும் சாதனங்கள். மாலையில் மலரின் வாசனையால் ஈர்க்கப்பட்டு, பூவறைக்குள் விழுந்த பூச்சி உடனே வெளியேற முடியாதபடி அப்பூக்களின் உள்ளமைப்பு உள்ளது. பின் இரவில் ஆண் பூக்கள் வெடித்த பின்தான் மகரந்தத்தைச் சுமந்து கொண்டு பூச்சிகள் வெளியேறுகின்றன.

முசீண்டா என்ற செடியின் இதழ்களில் ஒன்று இலை போல வெளுத்து, பச்சை இலைகளுக்கு நடுவே மலரை எடுப்பாகத் தெரியச் செய்கிறது. நாம் வீடுகளில் வளர்க்கும் போகைன்வில்லா செடியில் சிவப்பு, ஆரஞ்சு வண்ணங்களில் இருப்பது பூக்களல்ல. நிறமற்ற சிறிய பூவைப் பளிச்சென்று காட்ட இலைகள் உருமாறி வண்ண மலர் போல் தோற்றமளிக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் உள்ள சில வகை ஆர்க்கிட்களின் பூக்கள் 'பெண் வண்டு'களைப் போல் காட்சியளித்து ஆண் வண்டுகளை ஈர்க்கின்றன.

பறவைகளால் வாசனை அறிந்து பூக்களை நெருங்க முடியாது. எனவே நிறங்களாலேயே பூக்களை அறிந்து தேன் குடிக்கின்றன. பெரும்பாலும் பறவைகள் சிவப்பு வண்ணத்தையே விரும்புகின்றன.

காற்றின் மூலம் மகரந்தச் சேர்க்கை செய்யும் மலர்களின் மகரந்தம் நிறைய வீணாகிறது. அவ்வகை மலர்களில் காற்றிலடித்துச் செல்வதற்கு ஏற்றாற் போல் மகரந்தமும், சூல் முடியும் மரத்தின் உச்சியில் இருக்கும். இதழ்கள் விரிந்து மகரந்தத் தாள் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். மகரந்தம் உருண்டையாகவும் வழுவழுப்பாகவும் காணப்படுகிறது.

நீரில் வாழும் செடிகளில் அல்லது நீர் மூலம் மகரந்தச் சேர்க்கை செய்யும் மலர்களில் ஆண் பூக்கள் துண்டிக்கப்பட்டு படகு போல் நீரில் மிதந்து சென்று சூலகத்தை அடைகின்றன. அல்லி, தாமரை நீர்த்தாவரங்களாக இருந்தாலும் மகரந்தச் சேர்க்கை பூச்சிகள் மூலமே நடைபெறுகின்றன.

பெற்றோர்களே...
கோகுலம் சந்தா செலுத்தினால்
அமரர் கல்கியின் புத்தகங்கள் பரிசு!

உங்கள் குழந்தைகளின் மனம் கவர்ந்த கோகுலத்துக்குச் சந்தா செலுத்தினால் உங்களுக்கு அற்புதமான கல்கி புத்தகங்கள் பரிசு!

- 2 ஆண்டு சந்தா ரூ.144/- கட்டினால் **ரூ.85/-** மதிப்புள்ள **'பார்த்திபன் கனவு'** பரிசு!
- 4 ஆண்டு சந்தா ரூ.288/- கட்டினால் **ரூ.250/-** மதிப்புள்ள **'சிவகாமியின் சபதம்'** பரிசு!
- 8 ஆண்டு சந்தா ரூ.576/- கட்டினால் **ரூ.525/-** மதிப்புள்ள **'பொன்னியின் செல்வன்'** (5 பாகங்கள்) பரிசு!

ஏற்கெனவே சந்தாதாரர்களாக இருப்பவர்களும் உடனடியாக தொகை அனுப்பி இத்திட்டத்தில் சேர்ந்தால் அவர்களின் சந்தா காலம் முடிவடையும் இதழிலிருந்து இத்திட்டம் செயல்படும்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி சந்தா செலுத்துங்கள். ஒப்பற்ற பரிசைப் பெறுங்கள்.

ஆகஸ்ட் 31 வரை மட்டுமே இந்த விசேஷ திட்டம் செயல்படும்.

பெயர் : ____________________

முகவரி : ____________________

☐ **2 ஆண்டு சந்தா ரூ.144/-** ☐ **4 ஆண்டு சந்தா ரூ.288/-**

☐ **8 ஆண்டு சந்தா ரூ.576/-**

பணத்தை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் (Cheques) ஏற்கப்படமாட்டாது.

டி.டி. அல்லது எம்.ஓ.வை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.

நிறையக் குடிசைகளைக் கொண்ட மிகப் பெரிய கிராமம் ஒன்று இருந்தது. பெண்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்க, குழந்தைகள் கிராமத்திற்குள் கூடி சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருப்பார்கள். அந்தக் குழந்தைகள் கூட்டத்தில் ஒரே ஒரு சிறுவன் மட்டும் மெலிந்து காணப்பட்டான். அவன் முகத்தில் சந்தோஷக் களையே இல்லை. ஓராண்டுக்கு முன்புதான் அவனுடைய தாய் இறந்துவிட்டாள். அவனுடைய பசியறிந்து உணவளிக்கவோ அன்பு செலுத்தவோ கிராமத்துப் பெண்களில் ஒருவர்கூட முன் வருவதில்லை. குடிசைக்கு வெளியே அழுதபடியே நின்றிருந்தாலும் ஒருவரும் அவனைக் கவனிப்பதில்லை. அவனுக்குத் தந்தை இருந்தும் அவனும் சிறுவனைக் கவனிப்பதில்லை. நாளுக்கு நாள் அந்தச் சிறுவன் வலுவற்று மெலிந்து போனான்.

ஒரு நாள் சில விறகுகளைச் சேகரித்துக் கொண்டுபோய் ஒரு பெண்மணியிடம் கொடுத்து பதிலுக்கு உணவளிக்கும்படி கேட்டான். அவளோ சிறுவன் என்றும் பரிதாபப்படாமல், "இந்த விறகுகள் மிகவும் சிறியதாக இருப்பதால் அடுப்பெரிக்க உதவாது. ஆனால் உன்னை அடிக்க உதவும்" என்று சொல்லி அடித்துத் துரத்தினாள்.



மந்திரக் கொம்பு!

மனமுடைந்து போன அந்தச் சிறுவன் 'இனி இந்தக் கிராமத்து மக்கள் யாரிடமும் கையேந்தவும் மாட்டேன். அவர்கள் முகத்தில் விழிக்கவும் மாட்டேன்' என்று சொல்லிக் கொண்டான். இரவு வந்ததும் தன் அப்பாவின் மாட்டுத் தொழுவத்திற்குச் சென்று அங்கிருந்த மாடு ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன்மீது அமர்ந்தபடி அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டான். விடியும் நேரத்தில் ஒரு மரத்தடியில் மாட்டின் மீதிருந்து இறங்கி சிறிது நேரம் களைப்பாறினான். மீண்டும் புறப்பட்ட போது வழியில் தூரத்தில் மேகம் போல் புழுதிப் படலமொன்று படர்ந்து வருவதை இருவரும் கண்டனர்.

''பலம் வாய்ந்த காளையொன்று மாடுகளின் மந்தைக்குத் தலைமை தாங்கி வருவதுபோல் தோன்றுகிறது'' என்று சிறுவனிடமிருந்த மாடு கூறியது. ''அருகில் வந்ததும் அது என்னைச் சண்டையிட கூப்பிடும். கவலை வேண்டாம். இந்தச் சண்டையில் நான்தான் ஜெயிப்பேன்'' என்றது மாடு.

சீறிவந்த காளையைப் பார்த்துச் சிறுவன் பயந்துபோனான். இரண்டு காளைகளும் ஒன்றுக்கொன்று



ஆ.குமார்

பயங்கரமாக மோதிக் கொண்டன. கடைசியில் சொன்னது போலவே சிறுவனின் காளை வெற்றி பெற்றது. தோல்வியடைந்த காளை பலத்த காயத்துடன் தன்னுடைய மந்தையுடன் திரும்பிச் சென்றது. மீண்டும் சிறுவனும் காளையும் பயணத்தைத் தொடர்ந்தனர். அன்று மாலை மீண்டும் இன்னொரு காளை மந்தையுடன் அவர்கள் எதிரில் வந்தது.

''முதலில் என் மீதிருந்து நீ கீழே இறங்கு'' என்று சிறுவனிடம் சொன்னது காளை. ''இந்த இரண்டாவது காளையுடனும் நான் சண்டை போட்டாக வேண்டும். ஏற்கனவே நான் சண்டையிட்டதில் மிகவும் களைப்படைந்திருக்கிறேன். இந்த முறை என்னால் வெற்றி பெற முடியாது. இருந்தாலும் நான் பயப்படவில்லை. ஒரு வேளை இந்தச் சண்டையில் நான் இறந்துவிட்டால் என்னுடைய உடலிலிருந்து கொம்புகளை மட்டும் வெட்டி எடுத்து உன்னுடன் வைத்துக் கொள். உனக்குப் பசியெடுக்கும் போதோ, வேறு ஏதேனும் தேவைப்பட்டாலோ அவற்றைக் கரங்களால் உரசினால் போதும் நீ விரும்புவது கிடைக்கும்'' என்று சொல்லிவிட்டு மூர்க்கத்தனமாகத் தன்னைத் தாக்க வந்த காளையை எதிர்க்கத் தயாரானது.

தனக்கு ஆதரவாக நண்பன் போல் விளங்கிய அந்தக் காளை, சண்டையில் இறந்துவிட்டால், தான் தன்னந்தனியாளாகப் போய் விடுவோமோ என்ற கவலை சிறுவனுக்கு ஏற்பட்டபோது துக்கம் நெஞ்சை அடைத்தது. சண்டையிடும் இரண்டு காளைகளையும் பயத்துடன் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தான். முடிவில் சிறுவனின் காளை பரிதாபமாகப் பூமியில் சாய்ந்து இறந்து போனது.

சிறுவனால் அழுகையை அடக்க முடியவில்லை. கூடவே அந்தக் காளை சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. அதன்படி இரண்டு கொம்புகளையும் வெட்டி எடுத்துக் கொண்டான். தன்னந்தனியாகப் பயணத்தைத் தொடர்ந்தான். இனி என்ன நடந்தாலும் திரும்பவும் தான் வசித்து வந்த கிராமத்திற்கு மட்டும் திரும்பிப் போகக் கூடாது என்ற வைராக்கியத்துடன் நடந்தான்.

''எங்க வீட்டு வாசல் கதவை மாடு தின்னுடுச்சு...!''

''எப்படி?''


''அதுலதான் 'புல்'ன்னு எழுதியிருந்ததே...!''

- பாலு, சென்னை

இரவு வந்தது. கண்ணுக்குத் தெரிந்த குடிசையொன்றுக்குச் சென்று அன்றிரவு அங்கு தங்க அனுமதி கேட்டான். ''தாராளமாக நீ இங்கே தங்கிக் கொள்ளலாம். ஆனால் உனக்குப் பசியாற கொடுத்துதவ உணவுதான் இல்லை. ஏற்கெனவே இந்தப் பகுதியில் கடுமையான பஞ்சம். நானே கொட்டைகளைத் தின்று பசியாறுகிறேன்'' என்று அந்தக் குடிசைக்குச் சொந்தக்காரன் சிறுவனிடம் சொன்னான்.

உள்ளே சென்று அமர்ந்த சிறுவனோ புன்னகைத்தபடி தன்னிடமிருந்த காளை மாட்டின் கொம்புகளை எடுத்து கைகளால் வருடியபடியே உணவளிக்கும்படி கேட்டுக் கொண்டான். அவன் கேட்டபடியே அவர்கள் எதிரே தேவைக்கும் அதிகமாகவே உணவும் பருகுவதற்குத் தண்ணீரும் தோன்றியது. இருவரும் வயிறாற சாப்பிட்டு மகிழ்ந்தனர். பின்னர் இருவரும் உறங்கச் சென்றனர். ஆனால் அந்த மனிதனுக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. அந்தக் கொம்புகளின் மந்திரசக்தியை உணர்ந்த அவன், சிறுவனிடமிருந்து அவற்றை திருடிக் கொள்வதென்று தீர்மானித்தான். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த சிறுவனின் கொம்புகளை எடுத்துக் கொண்டு ஏற்கெனவே தன்னிடமிருந்து இறந்துபோன காளை மாட்டின் கொம்புகளைக் கொண்டு வந்து மூலையில் நிறுத்தினான். அதிசயக் கொம்புகளை மறைத்து வைத்து விட்டு உறங்கிப் போனான்.

விடிந்தது. அந்த மனிதனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு போலி மாட்டுக்



கொம்புகளை எடுத்துக் கொண்டு சிறுவன் பயணத்தைத் தொடர்ந்தான். பல மணி நேரம் கழித்து அவனுக்குப் பசி எடுத்த நேரத்தில் ஒரு மரத்தடியில் அமர்ந்து தன் கையிலிருந்த போலிக் கொம்புகளைத் தடவி உணவு தரும்படி கேட்டான். உணவு ஏதும் வரவில்லை. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்தச் சிறுவன் மீண்டும் தான் இரவு தங்கியிருந்த குடிசையைத் தேடி நடந்தான். குடிசைக்கருகில் வந்தவுடன் உள்ளே ஏதோ குரல் கேட்பதை உணர்ந்தான். கதவுக்கருகில் நின்று செவி கொடுத்துக் கேட்டான். கொம்புகளை இவனிடமிருந்து திருடிய அந்த மனிதன் எத்தனை தேய்த்தும், அதட்டிக் கேட்டும் அந்தக் கொம்புகள் இவன் கேட்பதை கொடுக்க மறுத்தன. சிறுவனுக்கு மட்டுமே அவை அடிபணிந்து, கேட்டதைக் கொடுக்கும் என்பதை உணர்ந்த அந்த மனிதன் அடைந்த கோபத்திற்கு அளவே இல்லை.

அதே சமயத்தில் உள்ளே நுழைந்த சிறுவனைப் பார்த்ததும் அவனுக்குப் பயம் ஏற்பட்டது. அந்தச் சிறுவனிடம் ஏதோ மந்திர சக்தி இருப்பதால்தான் அவன் கேட்டவை கிடைக்கிறது என்று நினைத்த அந்த மனிதன் பயத்தில் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடினான். அவன் பயந்து ஓடுவதைப் பார்த்து சிரித்தபடியே அங்கிருந்த தன்னுடைய கொம்புகளை எடுத்துத் தேய்த்தான். அவன் கேட்டபடியே உணவு வந்தது. திருப்தியுடன் உண்டு மகிழ்ந்த சிறுவன் அன்றிரவு அந்தக் குடிசையிலேயே தங்கி விட்டு மறு நாள் காலை வழக்கம் போல் தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தான்.


பகல் முழுவதும் நடப்பது; நடுப்பகலில் எங்கேயாவது நிழலில் ஒதுங்கி அமர்ந்து சாப்பிடுவது, மீண்டும் இரவு நேரத்தில் ஏதாவது ஒரு குடிசையில் தங்குவதற்கு இடம் கேட்பதுமாகப் பயணத்தைத் தொடர்ந்தான் அந்தச் சிறுவன்.

ஒரு நாள் வழக்கம்போல் ஒரு குடிசைக்கு முன்பு நின்று அன்றிரவு தங்க அனுமதி கேட்டபோது குடிசையின் சொந்தக்காரன், இவனுடைய அழுக்கடைந்த உடைகளையும் தோற்றத்தையும் கண்டு "அநாதைகளுக்கெல்லாம் இந்தக் குடிசையில் இடமில்லை" என்று சொல்லி துரத்தினான். இதனால் மனமுடைந்து போன சிறுவன், ஆற்றங் கரைக்குச் சென்று நன்கு மூழ்கி குளித்தெழுந்தான். தன்னிடமிருந்த மந்திரக் கொம்புகளைத் தேய்த்து, அணிந்து கொள்ள நல்ல உடைகளையும் நகைகளையும் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான். அவன் கேட்டவை அனைத்தும் கிடைத்தன. அவற்றை அணிந்து கொண்டவுடன் ஒரு ராஜாவின் மகன் போல் எடுப்பான தோற்றத்துடன் காட்சியளித்தான். அருகில் தெரிந்த கிராமத்திற்குள் நுழைந்தபோது அங்கிருந்த தலைவன் ஓடிவந்து இவனை வரவேற்று பிரம்மாண்டமான விருந்துக்கு ஏற்பாடு செய்தான்.

அந்தச் சிறுவன் பல ஆண்டுகள் அந்தக் கிராமத்திலேயே தங்கி வளர்ந்து வாலிபனானான். தனக்கு என்னென்ன தேவையோ அனைத்தும் தன்னிடமிருந்த மந்திரக் கொம்புகள் மூலம் அதிகமாகவே கிடைத்து வந்ததால் செல்வந்தனாக - வசதி படைத்தவனாக விளங்கினான். ஏழை, எளியோருக்கு அள்ளி, அள்ளி வழங்கினான். கிராம மக்கள் அவனைத் தெய்வம் போல் மதித்தனர். கிராமத் தலைவன் தன்னுடைய மகளை அவனுக்கு மணமுடித்து வைத்தான். அநாதை என்ற உணர்வோடு கிராமத்தை விட்டுச் சிறு வயதில் வெளியேறிய அந்தச் சிறுவன் மதிப்புடனும் மரியாதையுடனும் குடும்பத்தோடு வாழ்ந்தான். ●




பேச்சும்





உணவுக்கு அறுசுவைபோல்
உரைத்தற்கும் சுவைகள் உண்டு;
உணர்வுக்கு ஏற்றவாறு
உரைத்தலின் சுவையும் மாறும்!



ஒன்றையே திரும்பச் சொன்னால்
உவர்ப்பான உப்புப் பேச்சு;
பன்னியே அதையே மீண்டும்
பகர்ந்திடல் புளிப்புப் பேச்சு!



விரும்பாத போதுரைத்தல்
வாழைப்பூத் துவர்ப்புப் பேச்சு;
விருப்பத்திற்கெதிராய்ப் பேசல்
வேப்பங்காய் கசப்புப் பேச்சு!



என்.சுந்தரராமன்



சுவையும்



கனன்றெழும் கோபத்தை நாம்
காட்டும்சொல் எரிப்புப் பேச்சு;
கனிவோடு இதமாய்க் கூறல்
கரும்பென இனிக்கும் பேச்சு!




பேசிடும் வகைகள் கண்டோம்
பேசாது இருத்தல் நன்றாம்;
பேசத்தான் வேண்டுமாயின்
பேசுவோம் இனிப்புப் பேச்சு!



உவத்தலாம் உரைகள் ஒன்றே
உலகத் தோர்விரும்பக் கேட்பர்;
எவர்க்குமே இனிப்புப் பேச்சு
என்றைக்கும் சிறப்புச் சேர்க்கும்!






• பெரியார்
• பாரதியார்

எடுபிடி டாக்டர்!

நார்வே நாட்டைச் சேர்ந்த அமுன்சென் என்பவர் டாக்டராக இருந்தார். ஆனால், அவர் வைத்தியம் செய்வதையும், பணம் சம்பாதிப்பதையும் மட்டுமே வாழ்க்கை என்று நினைக்காமல், செயற்கரிய செயல்கள் எதையாவது சாதிக்க வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தார். மனிதக் காலடிகளே படாத அபாயகரமான இடங்களாகக் கருதப் பட்ட துருவப் பிரதேசங்களுக்குச் சென்று ஆராய்ச்சி செய்ய விரும்பினார். அதற்கு அதிக அளவில் பணம் தேவைப்பட்டது. அந்த அளவுக்கு அவரிடம் பண வசதி இல்லை. எனவே, அவரது அந்த முயற்சிக்கு யாராவது உதவி செய்ய மாட்டார்களா என்று பலரிடமும் சென்று தன் ஆர்வத்தைக் கூறினார். ஒருவர் துருவப் பகுதிகளுக்குச் சென்று மீள முடியும் என்ற நம்பிக்கை இல்லாததால், யாருமே அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

அமுன்சென்னுக்கு இருபத்தைந்து வயது ஆனபோது, துருவப் பகுதிகளை ஆராய்ச்சி செய்வதற்கு அந்த நாட்டிலிருந்து ஒரு குழு புறப்பட இருப்பதாக அறிந்தார். அந்தக் குழுவில் அவர் இடம் பிடிக்க முயன்றார். ஆனால் அக் குழுவினர் விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் மட்டுமே அக் குழுவில் இடம் உண்டு என்றும், டாக்டர்கள் வந்து ஆராய்வதற்கு ஒன்றுமில்லை என்றும் கூறி, அவரை சேர்த்துக்கொள்ள மறுத்து விட்டனர்.

அந்தக் குழுவில் எடுபிடி வேலைகள் செய்வதற்கும், சமையல் வேலை செய்வதற்கும் ஓர் ஆள் தேவைப்பட்டது. இதை அறிந்த அமுன்சென் அந்த வேலைகளைத் தாம் செய்வதாகத் தெரிவித்து, அந்த குழுவிலே இடம் பெற்றார்.

நாளடைவில் துருவப் பயணத்தில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள், தொல்லைகளைக் கண்டு, அந்தக் குழுவிலிருந்த பலர் விலகி விட்டனர். அமுன்சென் அந்த முயற்சியில் கொண்ட உறுதியால், படிப்படியாக முயன்று, அந்த ஆராய்ச்சிக் குழுவுக்குத் தலைவரானார்.

வட துருவத்தில் காந்தப்பகுதி அமைந்துள்ள இடத்தை அமுன்சென் சென்று கண்டு பிடித்தார். தென்துருவப் பகுதிகளுக்கும் சென்று வரும் துணிச்சலான முயற்சியை மேற்கொண்டு வெற்றி பெற்றார். கப்பல் மூலம் துருவப் பகுதிகளைக் கடந்து சாதனையாற்றினார். விமானம் மூலம் பறந்து சென்று வடதுருவப் பகுதிகளைக் கடப்பது மிகவும் ஆபத்தானது என்று கருதப்பட்டது. அமுன்சென் அந்தத் துணிகரமான பயணத்தையும் மேற்கொண்டு வெற்றி பெற்று, சாதனை படைத்தார்.

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.

லக்ஷ்மிக்கு சரஸ்வதி பணியக் கூடாது!

பில்!

காந்திஜி, தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது, அவரது மகன் மணிலால் காந்தி குடும்பத்துடன் காந்திஜியைக் காண வந்தார். காந்திஜி இருந்த ஆஸ்ரமத்திலேயே நான்கு நாட்கள் தங்கியிருந்தார். அவர் ஊருக்குத் திரும்புவதாக காந்திஜியிடம் சொல்லி விடை பெற்றுக் கொள்ளும்போது அவரிடம்



• ரூஸ்வெல்ட்

• ஜான் எஃப் கென்னடி

காந்திஜி ஒரு பில்லைக் கொடுத்தார். அவர்கள் நான்கு நாட்கள் ஆஸ்ரமத்தில் தங்கியிருந்த போது அவர்களது சாப்பாடு, சிற்றுண்டி வகைகளுக்குச் செலவான தொகைக்கான பில்தான் அது. மகனாகவே இருந்தாலும் ஆஸ்ரம நடைமுறை விதிகளுக்கு அவரும் உட்பட வேண்டியவர்தானே? வாய் பேசாமல் பில்லுக்குரிய பணத்தைக் காந்திஜியிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார் மகன் மணிலால் காந்தி.

- மு. ராம்குமார், திருநெல்வேலி.

சாக்லெட்

ஒருமுறை திருச்சி ரயில்வே சந்திப்பில் ரயிலுக்காகக் காத்திருந்த பெரியார் அங்கு கடை வைத்திருந்தவரிடம் சென்று 'காலணா'வைக் கொடுத்து மிட்டாய் கேட்டார். கேட்பவர் பெரியார் என்பதால் கடைக்காரர் கை நிறைய சாக்லெட்டுகளை அள்ளிக் கொடுத்தார்.

வாங்கிய பெரியாரோ, ''எங்களூரில் இவ்வளவு தர மாட்டேங்கிறான். நீங்க கைநிறைய தர்றீங்க. அப்ப இன்னொரு காலணாவுக்குத் தாங்க'' என்று இன்னொரு காலணாவை எடுத்து நீட்டினார். கடைக்காரருக்கு எதுவும் புரியவில்லை.

பெரியாரே அவரிடம் சொன்னார்: ''வியாபாரத்தில் வியாபாரியாக நடந்து கொள்ள வேண்டும். காலணாவுக்கு இவ்வளவு தரலாமா? நானாக இருந்தாலும் யாராக இருந்தாலும் உள்ளதைத்தான் தர வேண்டும்'' என்று சொல்லிவிட்டு ஒரு சாக்லெட்டை எடுத்துக் கொண்டு மீதியைக் கடைக்காரரிடமே கொடுத்து விட்டார்.

- ஏ.கே. நாசர், லெட்சுமாங்குடி.

கடிதம்

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக 1935ல் இருந்த ரூஸ்வெல்ட் காலத்து ஃபைல்களிலிருந்து ஒரு கடிதம் கண்டுபிடிக்கப் பட்டது.

'மதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் அவர்களே, அஞ்சல் தலை சேகரிக்கும் வழக்கத்தைப் பொழுதுபோக்காகக் கொண்டிருப்பவன் நான். அதனால், தாங்கள் எனக்கு ஏதாவது ஸ்டாம்ப் அனுப்பி உதவினால் நல்லது. மேலும் அவற்றை ஒட்டி வைக்க ஒரு அழகான நோட்டும் அனுப்பி வையுங்கள். ஓய்வு கிடைக்கும் நேரத்தில் நீங்கள் நிச்சயம் எனக்கு உதவுவீர்கள் என்று என் அம்மா கூறினார். ஒரு கடிதமும் எனக்கு எழுதுவீர்களானால், அதை என் அறையிலேயே ஃப்ரேம் போட்டு வைத்துக் கொள்வேன். அனைவரையும் விசாரித்ததாகச் சொல்லவும்'.

- இதுதான் அந்தக் கடிதம். இக்கடிதத்தை எழுதிய சிறுவன் பிற்காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக உயர்ந்த ஜான் எஃப் கென்னடிதான்.


- எம். வினோத், விருத்தாசலம்.

பணிந்து போகக் கூடாது


பணக்காரர் ஒருவர் ஒருமுறை பாரதியாரின் புலமையைப் பாராட்டி நூறு ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார். பாரதியார் அதை வாங்க மறுத்துவிட்டார்.

''உங்கள் கைகளில் அந்த நோட்டை வைத்துக் காட்டுங்கள். அதை நான் எடுத்துக்கொள்கிறேன். ஏனென்றால் நீங்கள் கொடுக்க நான் வாங்கினால் என் கை தாழ்ந்து விடும். என்றைக்கும் சரஸ்வதி லக்ஷ்மிக்குப் பணிந்து போகக் கூடாது. அது உலகத்திற்கு நல்லதல்ல'' என்று தமது செயலுக்குப் பாரதியார் விளக்கம் தந்தார்.

- நெ. இராமன், சென்னை - 74.



புதையல்
41
40
39
38
37
புதைய
திருடர்கள்
23
20க்குச் செல்லவும்
24
25
26
வனம்
10க்குச் செல்லவும்
14
22
21
20
15
16
17
18
19
24க்குச்
செல்லவும்
6
5
4
3


பேய்
36
ஆரம்பத்திற்குச் செல்லவும்
35
34
இரவு
33
ஆட்டம் தவிர்க்கவும்
32
31
30
29
28
27
12
11
10
9
31க்குச் செல்லவும்
புதை மணல்
7
ஆட்டம் தவிர்க்கவும்
8
முத்து
தாயக்கட்டை,
ஒவ்வொருவருக்கும் ஒரு காய்
எடுத்துக் கொண்டு அம்மா,
அப்பா, தாத்தா, பாட்டி,
அண்ணன், அக்கா, தம்பி,
தங்கை, தோழன், தோழி
யாருடன் வேண்டுமானாலும்
ஜாலியாக விளையாடி
மகிழுங்கள்! தாயம்
விழுந்தவுடன் ஆரம்பிக்கவும்!
ஆரம்பம்
1
2

''என்னை ஒன்னும் பண்ணாதே!''

லீவ் லெட்டர்

எங்கள் வகுப்பில் சுதா என்ற மாணவி ஊருக்குச் செல்ல வேண்டியிருந்ததால்அன்று மதியம் மட்டும்



விடுமுறை அளிக்குமாறு ஆசிரியரிடம் கேட்டாள். உடனே ஆசிரியர், ''சரி, ஆனால் ஒரு லீவ் லெட்டர் எழுதிக் கொடு!'' என்றார். அவளும் எழுதிக் கொடுத்தாள். அதைப் படித்த ஆசிரியர், ''ஐயோ.. நான் புள்ளக்குட்டிக்காரன்மா...என்னை ஒண்ணும் செஞ்சுடாதே! வேணும்னா ரெண்டு நாள் சேர்த்தே லீவு எடுத்துக்கோ!'' என்றார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு அவரே அக்கடிதத்தை எங்களிடம் காட்டினார். அதில் 'விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக் 'கொல்' கிறேன்' என அவள் எழுதியிருந்ததையே எங்கள் ஆசிரியர் நகைச்சுவையாகக் கூறியுள்ளார் என்பது பிறகுதான் புரிந்தது.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.



லாஸ்ட் பெஞ்ச்

எங்கள் வகுப்பில் புதிதாக ஒரு மாணவன் சேர்ந்தான். ஆசிரியர் அவனைக் கடைசி பெஞ்சில் உட்கார வைத்தார். அவனோ கடைசி பெஞ்சான மாப்பிள்ளை பெஞ்சில் உட்கார கொஞ்சம் யோசித்தான். உடனே ஆசிரியர் ''தம்பி! பஸ்னாத்தான் கடைசி சீட்டுல உட்கார்ந்தா குலுக்கும், ஆளைத் தூக்கிப் போடும். இங்கே லாஸ்ட் பெஞ்சிலே அப்படியில்லே. ஏகப்பட்ட சவுகரியங்கள் இருக்கு. ஆசிரியர் பாடம் நடத்திக்கிட்டு இருக்கும்போதே தூங்கினால் கூடத் தெரியாது'' என்றார். ஆசிரியரின் நையாண்டியை ரசித்துக்கொண்டே தனது இருக்கையில் அமர்ந்தான் புது மாணவன்.

- எஸ். பிரசாந்த், நெல்லையப்பபுரம்.

மரம் இருக்கிறதா?

அன்று தமிழ்ப்பாட வேளை. ஆசிரியர், 'சுற்றுப்புறச் சூழலைக் காப்பது எப்படி?' என்ற பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது, எங்களைப் பார்த்து ''வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தால் போதும். சுற்றுச்சூழல் மாசுபடாது இருக்கும்'' என்றார். ஆசிரியர் ஒவ்வொரு மாணவியிடமும், ''உங்கள் வீட்டில் மரம் வளர்க்கிறீர்களா?, எத்தனை மரம்?'' என்று



விசாரித்துக் கொண்டிருந்தார். என் குறும்புக்கார தோழியிடம், ''பாப்பா! உங்க வீட்டில் எத்தனை மரம் இருக்கிறது? என்னென்ன மரம் இருக்கிறது?'' என்று கேட்டார். என் தோழியோ, ''எங்கள் வீட்டில் ஏழு மரம் இருக்கிறது, ஏழு மரமும் ஏணி மரம் சார்!'' என்றதும் வகுப்பே சிரிப்பொலியில் நிறைந்தது.

-ஏ.எல். ராவியாகனி, காரைக்கால்.

இனிஷியல்


எங்கள் வகுப்பில் எம்.ஆர். ராகவேந்தர் என்று ஒரு மாணவன் படித்து வந்தான். புதிதாக வந்த வகுப்பாசிரியர், பதிவேடு எடுத்தார். அப்போது 'எம்.ஆர்'. ராகவேந்தர் என்று அழைப்பதற்குப் பதிலாக 'மிஸ்டர் ராகவேந்தர்' என்றழைத்தார். அந்த மாணவன் ''என் இனிஷியல் எம்.ஆர். மிஸ்டர் என்றழைக்காதீர்கள்'' என்றான். அதற்கு ஆசிரியர், ''உன் பெயருக்கு முன்னால், M.R என்று எழுதினால், நீ மிஸ்டர் ராகவேந்தராக ஆகிவிடுவாய்'' என்று கூறியவுடன் வகுப்பறையே சிரிப்பில் மூழ்கியது.



- கி. மகிழ்மாறன், திருநின்றவூர்.

தர்மம்!

எங்கள் வகுப்பில் தமிழ் ஆசிரியர் தருமத்தைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். ''இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். பொருளை வைத்துக்கொண்டே இல்லை என்று சொல்லக்கூடாது'' என்றார். அப்பொழுது அடுத்த வகுப்பிலிருந்து ஒரு மாணவன் வந்து, ''சார், கணக்கு சார் சிவப்பு இங்க் பேனா



கேட்டார்'' என்றான். உடனே அவர், ''இல்லைன்னு சொல்லு'' என்றார். உடனே ஒரு மாணவன் எழுந்து ''சார், உங்களிடம் தான் நீல இங்க் பேனா இருக்கே, அதைக் கொடுக்க வேண்டியதுதானே'' என்றான். அதற்கு அவர், ''நான் நீல இங்க் பேனாவைக் கொடுத்திருந்தால் சாருக்குக் காது கேட்காதுன்னு நினைச்சிருப்பான். அதான் கொடுக்கலை'' என்றார். வகுப்பே சிரிப்பலையால் நிறைந்தது.

- வே. ராதா, தேதியூர்

எங்கள் பள்ளியில் நடந்தது!

கனகசபையுடன் சந்திப்பு

பண்ணையாரின் கார்தான் தெருவை அடைத்துக் கொண்டு வந்து நின்றது. அதைப் பண்ணையாரே ஓட்டி வந்தார்.

எல்லோரும் அவர் சொல்லப் போகும் சேதியை ஆவலாய் எதிர்பார்ப்பவர்கள் மாதிரி எழுந்து பணிவாய் நின்றனர்.

அவர் அமைதியாய் காரை விட்டு இறங்கி வந்தார். எழுந்தவர்களை உட்காரும்படி சைகை காட்டினார்.

அவருடன் சிட்டழகு வராதது அவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

''என்னங்க ஐயா தனியா வர்றீங்க?'' என்றார் சிட்டழகின் அப்பா.

''என்னடா பண்ணறது? ராத்திரி முழுவதும் ஊரை வலை போட்டுத் தேடிட்டாங்க நம்ம ஆளுங்க. ஆனால் உன் பொண்ணு தென்படவே இல்லையே என்ன செய்யறது?'' என்றார் அனுதாபப்படும் குரலில்.

''அப்ப போலீஸுக்குப் போக வேண்டியதுதான்'' என்றார் சிட்டழகின் பக்கத்து வீட்டுக்காரர். 'அதுதான் சரி' என்று அதனை சிலர் ஆமோதித்தனர்.

பண்ணையார் அவர்களைப் பார்த்து ''என்னப்பா பேசறீங்க? நம்ம ஊர் விஷயம் ஏதாவது



போலீஸுக்குப் போனது உண்டா? அதென்ன புது பழக்கம்?'' என்றார்.

''ஏதாவது எல்லை தகராறு, குத்து வெட்டு, திருட்டு, கொள்ளை அப்படின்னா நாமளே பஞ்சாயத்துப் பேசி தீர்த்துகிறது தான் வழக்கம். ஆனால் புள்ளை கடத்தல் நடந்திருக்குன்னா எப்படி பேசித் தீர்த்துக்க முடியும்?'' என்றார் ஒரு பெரியவர்.

ரா. சுந்தரமூர்த்தி

''நீங்க சொல்றது சரிதான் பெரியவரே. நான் என்ன சொல்றேன்னா, அவசரப்பட்டு எதையும் செய்ய வேண்டாம். ஆளுங்களை அனுப்பி அக்கம் பக்கத்து கிராமங்களிலும் தேடிப் பார்த்துவிட்டுக் கடைசி காரியமா போலீஸுக்குப் போகலாமுன்னு சொல்ல வந்தேன்'' என்றார் பண்ணையார்



சின்னமனூர் சின்னப்பட்டாளம்

சமாதானம் பேசும் தோரணையாக.

தூங்கி வழிந்த முத்துக்குமாரரை ஒரு தட்டுத் தட்டினான் கிட்டான். ''என்னடா பிரச்னை போற போக்கைப் பார்த்தியா?'' என்றான்.

''ஆமாண்டா. கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன். சிட்டழகை எங்கேயோ ஒளிச்சி வைச்சிக்கிட்டு இந்தப் பண்ணையார் எத்தனை சாமர்த்தியமாகச் சமாளிக்கிறார் பாரு?''

அவங்ககிட்ட மாட்டிக்கிட்டு இருக்கிற சிட்டழகுக்கு ஏதாவது தொல்லை ஏற்படுறதுக்கு முன்பு மீட்டு ஆகணும். இனி தாமதித்து பயனில்லை'' என்றான் செந்தில் கிசுகிசுப்பாக.

பண்ணையார் பார்வை அவர்கள்மீது படரவே, அவர்கள் 'தேமே' என்று முகத்தை வைத்துக் கொண்டனர்.

சிட்டழகின் அம்மா மகளைத் தொலைத்த சோகத்தில் எங்கோ வெறித்தபடி உட்கார்ந்திருந்தாள். அப்பாதான் துண்டை வாயில் வைத்து திக்கித் திக்கிப் பேசினார்.

''ஐயா இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க? சிட்டழகைக் கண்டுபிடிக்க என்ன வழி?'' என்றார்.

''பதட்டப்படாதீங்க. 'பதறின காரியம் சிதறும்'னு சொல்லு வாங்க. நிதானமா யோசிச்சு முடிவு செய்வோம். போலீஸ் கேஸ் அது இதுன்னு போய் நிற்க வேண்டாம். எனக்கு ஒரு பெரிய போலீஸ் அதிகாரியைத் தெரியும். அவரிடம் தனிப்பட்ட முறையில் சொல்லி வைக்கிறேன். அவர் மூலமாக போலீசும் தேடும். நம்ம பங்குக்கு நாமளும் தேடலாம் புரிஞ்சுதா?'' என்றார் பண்ணையார் பவ்யமாக.

''நீங்க சொன்னா சரிதான் ஐயா. எப்படியாவது என் மகள் வீடு வந்து சேரணும். பாவிங்க ஒரு தப்பும் செய்யாத எம்மகளை எதுக்குக் கடத்தினாங்களோ?'' என்றார் சிட்டழகின் அப்பா.

''தைரியமா இருங்க; அவளுக்கு ஒண்ணும் ஆகாது. எதுக்கும் நம்ம அய்யனாருக்கு ஆடு வெட்டி சிறப்பு பூஜை போட்டுடலாம். எல்லாம் அவர் பார்த்துப்பார்'' என்று சொன்ன பண்ணையார் அங்கிருந்து புறப்படத் தயார் ஆனார்.

எல்லோரும் வணங்கி வழியனுப்பி வைத்தனர். அவரின் சுயரூபம் தெரியாத அப்பாவிகள்.

கார் உருமியபடி ஸ்டார்ட் ஆனது. திடுக்கிட்டு எழுந்தவனாகக் கேட்டான் உதாரணம் ''என்னடா சத்தம்?''

செந்தில் அவன் தலையில் ஒரு குட்டு வைத்தான். ''நல்லா தூங்கிட்டியா?'' என்றான்.

''இல்ல கொஞ்சம் அசந்துட்டேன்'' என்றான் அவன்.

அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் கலைந்து அவரவர் வீடு திரும்பினர். கிட்டான் உள்பட நால்வரும் நைசாக அங்கிருந்து நழுவி வாய்கால் கரைப் பக்கம்



வந்தனர்.

முகம், கை, கால்களைக் கழுவிக் கொண்டு மெயின் ரோடு நோக்கி நடந்தனர்.

''கிட்டா நாம இப்ப எங்கே போறோம்?'' என்றான் உதாரணம் கவலையோடு.

''எங்க வகுப்பு வாத்தியார் வீட்டுக்கு.''

''எதுக்கு அங்கே?''

''அவரோட தம்பி பக்கத்து டவுனில் போலீஸ் வேலையில் இருக்கார். அவரைப் போய் பார்க்க வேண்டியதுதான்'' என்றான் கிட்டான்.

''பெரியவங்க இல்லாம நாமே போய் கேஸ் குடுத்துடலாமா?'' என்றான் உதாரணம்.

''கேஸ் கொடுக்க இல்லைடா. ஊரில் நடக்கிற விஷயத்தைப் பற்றி அவரிடம் பேசப் போறோம்.''

''பேசி என்ன பண்றது?''

''சும்மா சும்மா கேள்வி கேட்டு நச் சரிக்காமல் யோசனை பண்ணு. பண்ணை யார் போலீஸுக்குப் போக வேண்டாம்னு சொல்ல காரணம், அவர் மறைக்கும் பல விஷயங்களை போலீஸ் வந்தா கண்டு பிடிச்சிடும் என்கிற பயம்தான்.''

''அவர்தான் பெரிய அதிகாரிக்கிட்ட சொல்றேன்னு சொல்லுறாரே?''

''அதெல்லாம் சும்மா ஏமாத்து வேலை.''

''அதனால?''

''அதனாலா நாம போய் போலீஸ்கிட்ட சொல்லுவோம்.''

''நாம போய் சொன்னா போலீஸ் ஊருக்குள்ள வந்து தேடுமா?''

''வெளிப்படையா தேடாது. ஆனால் ரகசிய நடவடிக்கை ஏதாவது எடுக்கலாம் இல்லையா?''

உதாரணம் முகம் மலர்ந்தான். ''அது தான் சரி. பண்ணையாரை நேரிடையாக விசாரிக்க முடியாது. தந்திரமாக நழுவி விடுவார்'' என்றான்.

''இப்பத்தான் புரிஞ்சுதா உன் மரமண்டைக்கு'' என்றன் செந்தில்.

''விடுடா கிண்டலுக்கு நேரமில்லை. இனி சாமர்த்தியமாகக் காய் நகர்த்தி யாகணும். இப்ப நம்ம சிட்டு அவர் கையில் இருக்கு ஜாக்கிரதை'' என்றான் முத்துக் குமார்.

வாத்தியார் சுப்பிரமணி வீட்டைச் சுற்றி நிறைய பூச்செடிகள் வளர்த் திருந்தார்.

சுற்று வேலியின் படலைத் தாண்டி நீண்டிருந்த நடைபாதை வழியே அவரது வீட்டை அடைந்தபோது, கதவுகள் சாத்தி இருந்தன.


கிட்டான் ''சார்... சார்...'' என்று குரல் கொடுத்தபடி கதவைத் தட்டினான். வாத்தியாரே வந்து கதவைத் திறந்தார். கைலி பனியனோடு வந்தவர் வெளியே நின்றிருந்தவர்களைக் கண்டு ஆச்சரி யப்பட்டார்.

''என்னப்பா இந்த நேரத்தில் எல் லோருமா வந்திருக்கீங்க?'' என்றார்.

''சார் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றித் தனியாகப் பேச ணும்'' என்றான் கிட்டான்.

''ஓ... தாராளமாகப் பேசலாம். உள்ளே வாங்க. வீட்டில் யாருமில்லை. எல்லாம் ஊருக்குப் போய் இருக்காங்க. நான் தனியாகத்தான் இருக்கேன்'' என்றார் அன்பொழுக.

எல்லோரும் உள்ளே சென்றனர். எப்படி ஆரம் பிப்பது என்ற தவிப்பில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டனர். அதற்குள் வாத்தியார் வேலைக்காரனை அழைத்து எல்லோ ருக்கும் காபி



வழங்கும்படி கேட்டுக் கொண்டார்.

காபி வரும்வரை பள்ளிக்கூடம், படிப்பு என பொதுவாக நல விசாரிப்புகள் தொடர்ந்தன.

சுடச்சுட காபி வந்ததும் அனைவரும் அதை ரசித்துக் குடித்து முடித்தனர்.

வாத்தியார் கேட்டார் : ''சரி வந்த விஷயத்தைச் சொல்லுங்க? என்ன அவசரம் இவ்வளவு சீக்கிரம் வந்திருக்கீங்க?'' என்றார்.

கிட்டான் வேலைக்காரனை நிமிர்ந்து பார்த்தான்.

அதைக்குறிப்பால் உணர்ந்த ஆசிரியர் அவனைத் தம்பளர் எடுத்துக் கொண்டு போகும்படி கூறினார். அவன் அங்கிருந்து அகன்றதும் கிட்டான் மளமளவென்று நடந்த நிகழ்ச்சிகளைத் தெளிவாக அவருக்கு எடுத்துச் சொன்னான்.

அவன் சொல்லச் சொல்ல ''அப்படியா! அப்படியா!'' என்று ஆச்சரியப்பட்டுப் போனார் வாத்தியார்.

''இருந்தாலும் உங்களுக்கு இத்தனை துணிச்சல் இருக்குமென்று நான் நினைக்கவேயில்லை. வெறும் வால் பசங்க என்றுதான் எண்ணியிருந்தேன். புத்திசாலித்தனமாகவும் சில காரியங்களைச் செய்து இருக்கிறீர்கள். சரியான சமயத்தில் பெரியவர்கள் உதவியை நாடியதும் நல்ல விஷயம்தான். என்னால் முடிந்த உதவிகளை நான் அவசியம் செய்கிறேன். விஷயம் வெளியே வேறு யாருக்கும் தெரிய வேண்டாம்.''

''எப்படி சார் சொல்வோம்?'' என்றான் உதாரணம்.

''சொல்ல மாட்டீங்க. எதுக்கும் சொல்லி வச்சேன்'' என்றார் வாத்தியார்.

''சார், உங்க தம்பி போலீஸ்காரரிடம் எப்போது பேசலாம்?'' என்றான் கிட்டான்.

''எப்போது பேசுவதாவது, இதோ இப்போதே புறப்படலாம். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி விட்டுக் குளிச்சிட்டு வந்து விடுகிறேன்'' என்றார்.

''சார், செடிகளுக்கு நாங்கள் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் குளித்துவிட்டு வாருங்கள்'' என்றான் முத்துக்குமார்.

''அதுவும் சரிதான். இன்றைக்கு நீங்களே ஊற்றுங்கள். ஆனால் எப்போதும் என் கையால் ஊற்றுவதுதான் வழக்கம்.'' என்ற வாத்தியார் குளிக்கக் கிளம்பினார்.

மற்றவர்கள் பூவாளி சகிதம் செடிகளுக்கு நீர் ஊற்ற உற்சாகமாகக் கிளம்பினார்கள்.

அரை மணி நேரம் ஆகி இருக்காது. இவர்கள் நீர் வார்த்துவிட்டு, கைகால் அலம்பிக் கொண்டு வரவும் வாத்தியார் குளித்து உடைமாற்றிக் கொண்டு வரவும் சரியாக இருந்தது.

வாத்தியார்தான் சொன்னார் ''நீங்கள் எல்லோரும் உங்கள் சைக்கிளில் புறப்பட்டுப் போய் ஊர் எல்லையில் நில்லுங்கள். நான் பின்னாடி வர்றேன். அங்கிருந்து எல்லோரும் சேர்ந்து போகலாம்.''

நால்வரும் புறப்பட்டனர். எப்போதும் ஐவராகவே போய் பழக்கப்பட்ட அவர்களுக்குச் சிட்டழகு இல்லாதது பெரும் மன வருத்தத்தை ஏற்படுத்தி இருந்தது. அவனோடு போய் பல காரியங்களைச் செய்த அவர்கள் இப்போது அவனுக்காகவே செயல்பட வேண்டி வந்ததை எண்ணி துன்புற்றனர்.



ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும் மட்டுமே சிங்கங்கள் உள்ளன. ஆணுக்கு மட்டுமே பிடரி மயிர் உண்டு. இவை கூட்டமாகவே வசிக்கும். பெண்களை ஆண் பாதுகாக்கும். ஆனால் பெண்கள்தான் வேட்டையாடும். ஆண் சிங்கம் தின்று முடிக்கும்வரை பெண்ணும் குட்டிகளும் காத்திருந்து பின்னரே உண்ணும். உருவத்தில் ஆணை விடப் பெண் சிறியது. காய்ந்த புல் நிறத்தில் இருப்பது மறைந்து கொள்ள வசதியாக இருக்கிறது. ஒவ்வொரு கூட்டமும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலேயே வசிக்கும். இதர விலங்குகளைத் தமது பிரதேசத்துக்குள் வர அனுமதிக்காது.

— ஜி.கே.எஸ்.மூர்த்தி,
கோபிசெட்டிப்பாளையம்

★ ஒட்டகச்சிவிங்கியின்குட்டி ஒரு மணி நேரத்திற்கு 1 செமீ. வளரும்.

★ நீர்யானையின் குட்டி நடப்பதற்கு முன்பு முதலில் நீந்தத் தொடங்கி விடும்.

★ ஒரு வரிக்குதிரையின் மேல் உள்ள வரிகளும் இன்னொரு வரிக்குதிரையின் மேல் உள்ள வரிகளும் ஒரே மாதிரி அமைவதில்லை.



★ கொரில்லா தண்ணீர் குடிப்பதே மிகவும் அரிது. அது தான் உண்ணும் பழத்திலிருந்தே தேவையான தண்ணீரை எடுத்துக் கொள்ளும்.

★ காட்டின் ராஜா சிங்கம் என்பது நமக்குத் தெரியும். ஆனால் சிங்கத்துக்கும் புலிக்கும் சண்டை வந்தால் புலிதான் ஜெயிக்கும்.

- பா. கவிதா, புதுடெல்லி

கிட்டான்தான் எல்லோரையும் தேற்றிக் கொண்டு வந்தான்.

வாத்தியார் சொன்ன இடத்தில் நால்வரும் நின்றனர்.

குறிப்பாக யாரும் தங்களைக் கவனிக்கிறார்களா என்று கண்காணிக்கும் பொறுப்பு செந்திலிடம் விடப்பட்டிருந்தது.

அவன் கருடப் பார்வையுடன் சுற்றும் முற்றும் கவனித்துக் கொண்டிருந்தான். அவர்கள் குறிப்பிட்ட விஷயத்தைத் தவிர்த்து வேறு விஷயங்களில் பேச்சை நிகழ்த்திக் கொண்டிருந்தனர்.

குறிப்பிட்ட நேரத்தில் வாத்தியார் தனது பழைய சைக்கிளில் அங்கு வந்து சேர்ந்தார்.

அனைவரும் பக்கத்து ஊரை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

வாத்தியாரின் தம்பி கனகசபை வீட்டின் முற்றத்தில் அனைவரும் போய் இறங்கினர்.

அவர்களைக் கண்டு உள்ளேயிருந்து ஓடிவந்த ஒரு சிறுவனிடம் "அப்பா இல்லையா?" என்றார் வாத்தியார்.

"கொல்லையில் இருக்கார்" என்று மழலையில் பேசிய அவன், "அம்மா பெரியப்பா வந்திருக்கார்" என்று கத்திக் கொண்டே திரும்பவும் உள்ளே ஓடினான்.

வாத்தியார் சந்து வழியாக வீட்டின் பின்புறப் பகுதிக்கு நடந்தார். திரும்பிப் பார்த்து "எல்லோரும் வாங்க" என்றார். அனைவரும் அவரைத் தொடர்ந்தனர்.

பின்புறத்தில் உடற்பயிற்சி சாதனங்கள் கிடந்தன. கனகசபை 'வெய்ட் லிப்ட்'டைத் தூக்கிக் கொண்டு நின்றிருந்தார்.

அவர்களைக் கண்டதும் "அடடா வாங்க வாங்க" என்றார் மகிழ்ச்சி பொங்க.

அவரின் முரட்டு மீசையை உதாரணம் ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

"என்ன தம்பி அப்படி பார்க்கிற? பயப்படாதே" என்ற கனகசபை "என்ன அண்ணா யாரு இந்தப் பொடிசுகள்?" என்று நகைச்சுவை ததும்பப் பேசினார்.

அவர் உருவத்துக்கும் பேச்சுக்கும் சம்பந்தமே இல்லாதது மாதிரி இருந்தது.

"வா சொல்கிறேன்" என்று தம்பியை அழைத்துக் கொண்டு கயிற்றுக் கட்டிலை நோக்கி நடந்தார் வாத்தியார்.

இவர்கள் இங்கே நின்றனர். வாத்தியாரும் கனகசபையும் கட்டிலில் போய் உட்கார்ந்தனர்.

கனகசபையின் மனைவி வெளியே வந்தாள். இவர்களைப் பார்த்து "உள்ளே வந்து உட்காருங்க ஏன் அங்கே நிக்கணும்? காபி சாப்பிடறீங்களா?" என்றாள்.

அவர்கள் "வாத்தியார் வீட்டிலேயே சாப்பிட்டாச்சு" என்றனர்.

கனகசபையும் வாத்தியாரும் சிறிது நேரத்தில் திரும்பி வந்தனர்.

திரும்பி வந்த கனகசபை அவர்களைப் பார்த்த பார்வையே புதுமாதிரியாக இருந்தது.

"வாங்கடா துப்பறியும் குஞ்சுகளா!" அண்ணன் சொல்றது எல்லாம் உண்மை தானா? பெரிய இடத்துப் பொல்லாப்பு தம்பிகளா, உங்ககிட்ட ஏதாவது ஆதாரம் இருக்கா?" என்றார்.

எல்லோரும் விழித்தனர். உதாரணம் மட்டும் "என்னிடம் ஒண்ணு இருக்கு" என்றான்.

எல்லோரும் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

(தொடரும்)

நாயைத் தூங்க விடாமல் தடுத்துக் கொண்டிருந்தால் ஐந்து நாட்களுக்குப் பிறகு அது இறந்து விடும். ஐந்து நாட்களுக்குப் பட்டினி கிடந்தால்கூட நாய் சாகாது.

ஒரு பிராணியின் விழிப்பு அல்லது தூங்கும் பழக்கங்கள் பகல் இரவு சுழற்சியைப் பொறுத்தே அமைகின்றன. ஸ்கங்க் என்னும் பிராணியை ஒரு இருட்டு அறையில் ஐந்து மாதங்கள் அடைத்து வைத்திருந்தார்கள். ஆனாலும் அது பகல் நேரங்களில் செய்ய வேண்டிய வேலைகளைப் பகலிலும், இரவு நேரங்களில் செய்ய வேண்டிய வேலைகளை இரவிலும் தொடர்ந்து செய்து கொண்டிருந்தது.


துருவப் பிரதேசத்தில் உள்ள ஒரு வகை வாத்து பனிக் கட்டியில் ஒட்டை செய்து அதில் படுத்துத் தூங்கி விடும்.

நியூசிலாந்தில் உள்ள 'கிவி' பறவை பூமிக்கடியில் காணப்படும் வளைகளில் நுழைந்து கொண்டு பகல் நேரங்களில் தூங்கும்.

'கிரீப்பர்' என்ற பறவை மரப் பொந்துகளில் மல்லாந்து படுத்துக் கொண்டு தூங்கும்.

'வௌவால் கிளி' ஒரு காலால் ஏதாவது ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தலை கீழாகத் தொங்கிக் கொண்டே தூங்குகிறது.

தூக்கம்... தூக்கம்...





ஸ்விப்லெட் பறவை பெரிய பந்து போல ஒன்றை ஒன்று கட்டிக் கொண்டு கூட்டமாகச் சேர்ந்து தூங்கும்.

கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும். கடல் புறாக்களும், 'அல்பட்ராஸ்' என்னும் பறவைகளும் சிறகுகளை நீட்டி விரித்துக் காற்றில் மிதந்து கொண்டே தூங்குவதும் உண்டு.

வாத்துகளும், அன்னங்களும் தண்ணீரில் மிதந்து கொண்டே தூங்குகின்றன. குளிர் நாடுகளில் இரவில் திடீரென நீர் உறைந்து விடுவதால் பனிக் கட்டியில் அவை மாட்டிக் கொள்வதுண்டு.

அமெரிக்கக் கண்டத்தில் உள்ள கறுப்பு வாத்து நீரில் மிதந்தவாறே தூங்கும்போது காற்றடித்தால் தூக்கத்திலேயே ஒரு காலை ஆட்டித் துடுப்புப் போட்டுக் காற்று தன்னைத் தன் இருப்பிடத்தை விட்டுத் தள்ளி விடாமல் பார்த்துக் கொள்ளும்.

சில பறவைகள் லேசான சத்தம் கேட்டாலும் விழித்துக் கொண்டு கூட்டில் இருந்து பறந்து ஓடிவிடும். ஆனால் ஆஸ்திரேலியாவில் காணப்படும் 'தவளை வாயன்' என்ற பறவை சரியான கும்ப கர்ணன். அதைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டாலும் அதன் தூக்கம் கலையாது.

முயல்கள் ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குக் குட்டித் தூக்கம் போடுகின்றன.

நீர் யானை மூக்கு மட்டும் வெளியே தெரியும்படி நீரில் மூழ்கியவாறு தூங்கும். பக்கத்தில் உள்ள நீர் யானைகளின் முதுகில் தலையைச் சாய்த்துக் கொண்டும் தூங்குவதுண்டு.



ஆப்பிரிக்காவில் காணப்படும் சிட்டுருங்கா என்ற மான்கள் விரோதிகளிடமிருந்து ஆபத்து வராமல் தூங்குவதற்காக நீருக்குள் கூட்டமாய் சூழ்ந்து நின்றபடி தூங்குகின்றன.

சீல் ஒரு நிமிஷம் தண்ணீருக்கு மேலே மூக்கை நீட்டி மூச்சை இழுத்துக் கொண்டு மெதுவாக மூழ்கித் தூங்கிவிடும். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மறுபடி மேலே மிதந்து வந்து மூச்சை இழுக்கும்.

- ஆர்.ஆர்.பூபதி



மாலா தேடிய மாயப்பெண்


3 கதை : விஜி படம் : சேகர்




... நாங்கள் பழைய நிலையை அடைந்து விடுவோம். இந்தத் தங்கப் பந்துடன் என் பாதி நாடும் உனக்கே தந்து விடுகிறேன்.
என்னால் முடியுமா அரசே?
நிச்சயம் முடியும். இது மந்திர நீர். எங்களுக்கு இது வேலை செய்யாது. உனக்குச் செய்யும். இதைக் குடித்தால் சற்று நேரத்திற்கு யார் கண்ணிலும் படமாட்டாய்!
நன்றி அரசே! இப்பொழுதே கிளம்பறேன்.
மாலா! இது மாயாஜாலங்கள் நிறைந்த காடு. தைரியமாகவும் புத்திசாலித்தனமாகவும் செயல்படுவது அவசியம். வெற்றியுடன் திரும்பி வா.
மாலா நீண்ட நேரப் பயணத்துக்குப் பின் -
இதுவரை ஆபத்து எதுவும் இல்லை! ரொம்பப் பசிக்கிறதே! என்ன பண்றது?


ஆ...
அதோ ஒரு மாமரம். நிறைய பழம் இருக்கு. வயிறு நிறையச் சாப்பிடலாம்.
என்ன? நான் அருகில் செல்லச் செல்ல மரம் நகர்ந்து கொண்டே போகிறதே! இது மாய மரம் போலிருக்கு. மரத்தைப் பின் தொடர்ந்து பார்க்கலாம்!
நீண்ட நேரத்துக்குப் பின் மரம் மறைந்தது. மாலா களைப்புற்று உறங்கினாள்.
திடீரென்று நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது.
லொள்
லொள்
என்ன நாய்கள் குரைக்கின்றன? ஒரு வேளை இது திலகன் இருக்கும் இடமோ?


மாலா நாய்கள் இருக்கும் இடத்தை அடைந்தாள்.
ஏழெட்டு நாய்கள் இருக்கின்றன. இதில் திலகனைக் கண்டுபிடிப்பது எப்படி?
மாலா நாய்களுக்கு அருகில் சென்றாள்.
ஆ... ஐயோ... ராட்சஸ நாய்கள் போலிருக்கே. இப்படி ஓடி வருகின்றன.
மாலா ஒரு புதரில் மறைந்து மந்திர நீரைக் குடித்தாள்.
தொடரும்



✉ மயில் பற்றிய குறிப்புகளில் அலெக்ஸாந்தர் இந்தியா மீது கி.மு. 327ல் படையெடுத்து வந்தார் என்றும் கி.மு. 325ல் திரும்பிச் சென்றார் என்றும் குழப்பி விட்டீர்களே?

- சே. சுதாகர், வீரமாங்குடி, தஞ்சை மாவட்டம்.

அன்புள்ள சுதாகருக்கு,

உலகம் முழுவதும் ஆண்டுகளை கிறிஸ்து பிறப்பை வைத்துதான் கணக்கிடுகிறார்கள். கிறிஸ்து பிறந்த பிறகு உள்ள ஆண்டுகளை ஏறு வரிசையில் அதாவது 2001, 2002 என்று குறிப்பிடுகிறோம். இதே கிறிஸ்து பிறப்பதற்கு முன் என்றால் இறங்கு வரிசையில் அதாவது 327, 326, 325 என்று குறிப்பிடுகிறோம். குழப்பம் தீர்ந்ததா?

- ஆசிரியர்.

ரொனால்டோ போஸ்டர் சூப்பர்!

✉ என்னுடைய கடிதத்திற்கு 'சார் தபால்' பகுதியில் பதிலளித்ததற்கு நன்றி. என்னுடைய படைப்புகளை அனுப்பி வைக்கலாம் என்பதை அறிந்தவுடன் என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! எனக்கு நிறைய ஜோக்ஸ், விடுகதை எல்லாம் தெரியும். என் அக்காகிட்டே சொல்லாமல் இதுவரை என் மனசுக்குள்ளேயே பூட்டி வைத்திருந்தேன். இப்பொழுது அதை எல்லாம் கோகுலத்துக்கு அனுப்பப் போறேன். கோகுலம் போஸ்டரில் ரொனால்டோவின் படங்கள் அருமை.

- வே. சுதர்சன்,ஆறாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்

✉ மயில்களைப் பற்றிய படத்துடன் கூடிய செய்திகள் வியப்பை அளித்தன. எங்கள் ஹீரோ ரொனால்டோ போஸ்டர் சூப்பரோ சூப்பர்!

- இராசி. முருகன், த. சங்கர், எஸ். அமீர்ஜான், இராமசமுத்திரம் கிராமம், வந்தவாசி வட்டம்.

✉ கடுகுக் கதைகள் சிறியதாக இருந்தாலும் 'சிந்தனை' செய்ய வைக்கும் கதைகளாக இருந்தன. ஓவியப் போட்டி முடிவில் சேவல்களைக் கண்டதும், 'கொக்கரகொக்கரகோ...சேவலே' எனப் பாடத் தோன்றியது.

-பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை.

✉ மந்திரி பதவியும் முறுக்குச் சோதனையும்' கதை மிகவும் அருமையான புதிய கதை. அஜய் ராஜாவுக்கு வாழ்த்துகள். பத்து வயது ஜனனிக்கு இவ்வளவு திறமைகளா? அட்டைப் படம் அசத்தல்.

- ஆர். ராஜேஸ்வரி, பத்தாம் வகுப்பு, அ.பெ.மே.நி.பள்ளி, தேனி.

✉ சுற்றுலாவில் சுற்ற பாடம் என்ற தேவி நாச்சியப்பனின் கதையைப் படித்தேன். நல்ல நீதிக் கதை; படமும் அருமை.

- ரா. பொன்ராசன், பாவலர் இல்லம், அருப்புக்கோட்டை.

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தூத்துக்குடி, மேலச்சித்தை, புதுடெல்லி, மடிப்பாக்கம், நல்லூர், செங்கல்பட்டு ஆகிய ஊர்களில் உள்ள பள்ளிகள் முன்னிலை வைத்து கடுமையான போட்டியில் இருக்கின்றன. உங்கள் பள்ளியும் இந்தப் போட்டியில் பங்கு பெற உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள்.



பூவில் பிறந்து நாவில் சுவைப்பது எது?

I. 1. சலசலக்கும் சிங்காரி; சண்டைபோடும் ஒய்யாரி; வாசலை மட்டும் தாண்ட மாட்டாள் - அவள் யார்?

2. காடெல்லாம் சுற்றி வரும் கறுப்பழகி; கான மழையில் காது குளிர வைப்பாள் - அவள் யார்?

3. பூவிலே பிறக்கும் நாவிலே சுவைக்கும் - அது என்ன?

4. ஆட்டத்தில் அசர வைப்பாள்; பார்வை மட்டும் பதற வைப்பாள் - அவள் யார்?

5. கல்லைக் கடித்தவனுக்குக் கடைவாய் வரை இனித்தது - அது என்ன?

6. கல் மண்ணால் கட்டாத வீடு; காற்றுக்கு ஆடும் வீடு; ஆனாலும் ஆபத்தில்லா வீடு - அது என்ன?

- உ. சங்கரலிங்கம், பூஞ்சேரி

II. 1. சுள்ளென்று இருப்பான்; சோற்றுக்குச் சுவை கூட்டுவான் - அவன் யார்?

2. வீட்டின் மேல் வீடு கட்டியிருப்பான்; வீட்டிற்குச் சென்றவர்களை விருந்தாக்கிக் கொள்வான் - அவன் யார்?

3. வெந்து கரியாகி விருந்து படைப்பான் - அவன் யார்?

4. மூன்று கண்களிருந்தும், இவனால் பார்க்க முடியாது - இவன் யார்?

5. நோயில்லாமல் இளைப்பான்; உணவில்லாமல் பருப்பான் - அவன் யார்?

6. அவன் கழற்றிய சட்டையை அடுத்தவர் அணிய முடியாது - அவன் யார்?

- எம். வினோத், விருத்தாசலம்

III. 1. தண்ணீர் பாயாத பாத்தி; தரையில் இல்லாத பாத்தி - அது என்ன?

2. ஐந்து ஊருக்கு ஒரே மைதானம் - அது என்ன?

3. உதடு இல்லாத வாய்; உலகத்தில் இருக்கும் வாய் - அது என்ன?

4. கண் உள்ளவனுக்குக் காத தூரம் வால் - அது என்ன?

- துரைமுருகன், காரமடை

IV. 1. அடித்த இடத்தில் இருக்கும்; அனைவரும் பார்த்து ரசிப்பர் - அது என்ன?

2. எட்டி நின்று பார்ப்பான்; பெட்டியில் போட்டுக் கொள்வான் - அவன் யார்?

3. ஏழை படுக்கும் பஞ்சணையை எடுத்துச் சுருட்ட ஆளில்லை - அது என்ன?

4. ஒரு கால் மனிதனுக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன?

5. கண்ணால் பார்க்கலாம்; கையால் பிடிக்க முடியாது - அது என்ன?

6. கையில்லாமல் நீந்துவான்; கால் இல்லாமல் ஓடுவான் - அவன் யார்?

7. தண்ணீர் இல்லாமல் வளரும்; தரையில்லாமல் படரும் - அது என்ன?

8. மஞ்சள் நிற அழகி நான்; மணமில்லாத அழகி நான்; மார்கழி வந்தால் வரவேற்பார் என்னை - நான் யார்?

- தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்

விடைகள் :

I. 1. நாக்கு 2.குயில் 3.தேன் 4.மயில் 5.கற்கண்டு 6.தூக்கணாங்குருவிக் கூடு


II. 1.ஊறுகாய் 2.சிலந்தி 3.விறகு 4.தேங்காய் 5.நிலா 6.பாம்பு

III. 1.சப்பாத்தி 2.உள்ளங்கை 3.கணவாய் 4.ஊசி-நூல்

IV. 1.காலண்டர் 2.கேமரா 3.பூமி 4.மிளகாய் 5.நிழல் 6.படகு 7.தலைமுடி 8.பூசணிப்பூ

மான்கள் பலவிதம்

ஆழி



மான்கள், இரட்டைக் குளம்பு இனத்தில் 'செர்விடே' என்னும் குடும்பத்தைச் சார்ந்தவை. உலகில் சுமார் 60 வகையான மான்கள் இருக்கின்றன. ஒரு மான் சுமார் 26 ஆண்டுகள் உயிர் வாழும்!




'மூஸ்' என்னும் மான்தான் உலகில் உள்ள மான் இனங்களில் பெரிய உருவம் கொண்டது. எடை சுமார் 816 கிலோ. அதன் கொம்பு சுமார் 2.15 மீட்டர் நீளமும் 95 செ.மீ. அகலமும் இருக்கும்!




மான் இனங்களில் மிகவும் வேகமாக ஓடுவது 'கறுப்பு பக்' என்னும் மான். இது மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் ஓடும்!





'செவ்ரோடைன்' அல்லது 'டிக்-டிக்' என்னும் சுண்டெலி மான், உருவத்தில் சிறியது. உயரம் சுமார் 30 செ.மீ. எடை சுமார் 9 கிலோ. இதற்குக் கொம்புகள் இல்லை. இந்த மான் கிழக்கு ஆப்பிரிக்காவில் காணப்படுகிறது.




மான்களின் தலையில் இருப்பவை கொம்புகள் இல்லை; அவையும் எலும்புகள்தாம்; உலகிலேயே தலையில் எலும்புகள் நீண்டு கொம்பாக வளரும் ஒரே விலங்கு மான்தான் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.









நான்கு கொம்புகள் உள்ள ஒரே விலங்கு 'ஜினஸ் டெட்ரா செரோஸ்' என்னும் மான். இதற்குத் தலையின் உச்சியில் இரண்டும், நெற்றியில் இரண்டுமாக நான்கு கொம்புகள் உண்டு!



மான் இனத்தில் மிகவும் பயங்கரமானது 'ஓரிக்ஸ்'. இதன் கொம்பு களின் நீளம் 1.30 மீட்டர். கூர்மையான இந்தக் கொம்புகளால் இது ஒரு சிங்கத்தைக்கூட குத்திக் கொன்று விடும்!

ஆனாலும் ஓரிக்ஸ் மான்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால் அவை தங்கள் கொம்பு களால் ஒன்றை ஒன்று குத்திக் கொள்வது இல்லை. கத்திச்சண்டை போடுவது போல், கொம்புகளால் தாக்கிக் கொண்டிருக்கும். களைத்துப்போன மான், தோல்வி அடைந்து ஓடிவிடும்!






அதிகம் கிளைகள் உள்ள கொம்புகளை உடைய இரண்டு மான்கள் சண்டையிட்டுக் கொள்ளும்போது, அவற்றின் கொம்புகள் பிரிக்கமுடியாதபடி மாட்டிக் கொள்ளும். அவ்வளவுதான்! அந்த இரு மான்களும் இரை தின்ன முடியாமல், நீர் அருந்த முடியாமல் அப்படியே இருந்து சாகவேண்டியதுதான்!




ஆண் மானின் கண்களுக்கு அருகில் வாசனைச் சுரப்பி உள்ளது. இச்சுரப்பியிலிருக்கும் வாசனையை வெகு தூரத்திலிருந்தே மோப்பம் பிடித்து, ஆண் மான் இருக்கும் இடத்தைப் பெண்மான்கள் கண்டுபிடித்து விடுகின்றன!

மான்களின் கால் குளம்புகளின் இடையில் ஒருவிதச் சுரப்பிகள் இருக்கின்றன. மான்கள் செல்லும் வழியில் இச் சுரப்பிகளிலிருந்து ஒருவித மணத்தை விட்டுச் செல்கின்றன.


கூட்டத்தை விட்டுப் பிரிந்து விடும் மான்கள் அந்த மணத்தை மோப்பம் பிடித்து, முன்னால் செல்லும் மான்களைக் கண்டுபிடித்து விடுகின்றன!



‘முண்டியாக்கஸ்’ என்னும் மான், வேட்டை நாயைப் போல் குரைக்கும்!




அதனால், அதைத் தாக்க வரும் விலங்குகள் பயந்து ஓடிவிடும்! அதற்குக் ‘குரைக்கும் மான்’ என்னும் பெயரும் உண்டு.



கஸ்தூரி மான்களில், ஆண் மானின் கொப்பூழுக்கு அருகில் கஸ்தூரிச் சுரப்பி இருக்கிறது. இது அடிவயிற்றுத் தோலில் ஒரு பை மாதிரி இருக்கும். கஸ்தூரி என்பது பழுப்பு நிறத்தில் பசை போன்று இருக்கும்; உலர்ந்தவுடன் கறுப்பாக மாறிவிடும். இது ஒரு மருந்துப் பொருள். ஒரு கஸ்தூரி மான், ஆண்டுக்கு 10 கிராம் கஸ்தூரியைச் சுரக்கும். ஒரு கிலோ கஸ்தூரி, உலகச் சந்தையில் சுமார் 15 லட்சம் ரூபாய்!




கஸ்தூரி மான்கள் இந்தியா, திபேத், சீனா, சைபீரியா ஆகிய நாடுகளில் இருக்கின்றன. கஸ்தூரிமான் சுமார் 50 செ.மீ. உயரம்தான் இருக்கும். ஆணுக்கு மட்டும் பற்கள் கீழ் நோக்கி வளர்ந்து தந்தங்கள் போன்று இருக்கும். 8 செ.மீ. நீளம் உள்ள இந்தப் பற்கள், பூமியில் புதைந்திருக்கும் கிழங்கு களைத் தோண்டி எடுக்கவும், எதிரிகளு டன் சண்டையிடவும் உதவுகின்றன.



துருவப் பிரதேசங்களிலும், லாப்லாந்திலும் உள்ளவர்கள் 'ரெயின் டீர்' என்னும் மானின் பாலை அருந்துகிறார்கள்.

'டேவிடியானஸ்' என்னும் மான் இனம் சீனாவில் இருக்கிறது. இதை 'கழுதை வால் மான்' என்பார்கள். இதற்குக் கழுதையின் வாலும், மாட்டின் குளம்பும், மானின் கொம்புகளும் உண்டு. இந்த மான் மட்டும் ஆண்டுக்கு இரண்டு தடவை கொம்பு உதிர்க்கும்.




ஐரோப்பாவில் உள்ள 'வெள்ளை சாமாய்ஸ்' மான்களை யாரும் வேட்டையாடுவதில்லை.



காரணம், அதைக் கொன்ற வர், ஒரு வருடத்திற்குள் இறந்து விடுவார் என்று நம்புகிறார்கள்.

'செய்கா' என்னும் மானுக்கு நுட்பமான மிகப் பெரிய மூக்கு உண்டு. அது வெகு தொலை விலிருந்தே மோப்பத்தினால் எதிரிகளைக் கண்டு கொள்ளும்.



புண்ணியத்தில் பாதி கொடு!

ஆர். பொன்னம்மாள்

சதானீகன் என்று ஒரு ராஜா. சிறந்த நீதிமான். யார் எதைக் கேட்டாலும் இல்லை என்ற சொல்லே அவன் வாயில் வருவதில்லை! அரசருக்கு ஒரே பிள்ளை. சதானீகன் காலம் முடிந்ததும் அவன் மைந்தனுக்குப் பட்டம் கட்டினர். அவனும் நீதி நெறி தவறாமல் அரசாண்டான். ஆனால் தான தருமம் செய்வதை வெறுத்தான்.

தான தருமம் செய்வதால் சோம்பேறிகள் பெருகுவதாகக் கூறினான். அனைவரும் உழைத்துப் பிழைப்பதே நியாயம் என்பது அவன் கொள்கை. இதனால் தான தருமங்கள் பெற்று வாழ்ந்த வேதியர்கள் சிரமப்பட்டார்கள்.

அரசனிடம் எப்படி எடுத்துச் சொல்லியும் அவன் சிரம் சாய்க்கவில்லை! "முனிவர்களே! அளவற்ற தான தருமங்கள் செய்த என் தந்தை எந்த உலகத்தில் இருக்கிறார் என்று அறிந்து சொல்லுங்கள். அதன்பின் தான தர்மம் செய்வதைப் பற்றி யோசிக்கிறேன்" என்றான் முடிவாக.

அந்தணர்கள் சோர்ந்து போயினர். பூலோகத்தில் யாக ஹோமங்கள் நடைபெறவில்லை. சூரியன் அந்தணவடிவில் அவர்கள் முன் தோன்றினார்.

"பார்க்கவ ரிஷியைச் சந்தித்தால் அரசன் கேள்விக்கு விடை கிடைக்கும்" என்று கூறினார். அந்தணர்கள் பார்க்கவ ரிஷியைத் தேடிச் சென்று தங்கள் நிலையைக் கூறி, அரசன் கேள்வியை முன் வைத்தனர்.

விண்ணுலகம் செல்லும் வல்லமை பெற்ற பார்க்கவர் விடை கண்டு வருவதாகக் கூறிப் புறப்பட்டார். வேதியர் பின்னால் வந்த சூரியன் தானும் வருவதாகக் கூறி பார்க்கவர் பின் சென்றார்.


சிறிது தூரம் சென்றதும் எதிரே வந்த பௌராணிகர் பார்க்கவரைப் பிடித்துக் கொண்டார்.

பார்க்கவரிடம், "ஐயா! போன ஜென்மத்தில் நான் புராண பிரசங்கி. ஒருநாள் கதை கேட்டு விட்டுத் தட்டில் நீர் எதுவுமே போடவில்லை! அது இன்று வட்டிப் போட்டுப் பெருகிவிட்டது. என் பாக்கியைத் தீர்த்தால் தான் மேலே நடக்கவிடுவேன்" என்றார் பௌராணிகர்.

"இப்போது என்னிடம் சல்லிக்காசு கூட இல்லையே" என்றார் முனிவர்.

"புண்ணியம் ஏராளமாக இருக்கிறதே! பாதியைக் கொடுத்துவிட்டுப் போங்கள்" என்றார் பௌராணிகர்.

"பாதி ரொம்ப அதிகம். ஆறில்



ஒரு பங்கு தருவார். பேசாமல் வாங்கிக் கொண்டு போங்கள்'' என்றார் சூரிய வேதியர்.

வேறு வழியில்லாமல் ஆறில் ஒரு பங்கு புண்ணியத்தைத் தானம் செய்துவிட்டு வழி நடந்தார் முனிவர்.

சிறிது தூரம் சென்றதும் இன்னொருவன் வழி மறித்து, ''போன பிறவியில் உங்கள் மாடுகளை மேய்த்து வந்தேன். ஒரு மாத பணம் பாக்கி; தந்துவிட்டு நடங்கள்'' என்றான்.

இப்போதும் சூரியன் தலையிட்டு ஆறில் ஒரு பங்கு புண்ணியத்தைத் தானமாகக் கொடுக்கச் செய்தார்.

அடுத்து வழி மறித்த நெசவாளி துணி நெய்து கொடுத்த வகையில் பாக்கி இருப்பதாகக் கூறி ஆறில் ஒரு பங்கு புண்ணியத்தைத் தானமாகப் பெற்றுக் கொண்டான்.


விண்ணுலகம் செல்லும் பாதி வழியிலேயே புண்ணியத்தைத் தொலைத்த ரிஷி மேலே நடக்க சக்தியற்றவரானார்.

அப்போது சூரியன் ''மகரிஷி! நான் யாருக்கும் கடன் பாக்கி வைக்கவில்லை. என் புண்ணியம் அதிகமாக இருக்கிறது. என்னைப் பிடித்துக் கொண்டு நடங்கள்'' என்றார். அப்படியே செய்தார் பார்க்கவர்.

நேராக இருவரும் யமலோகம் சென்றனர். யமதர்மனைக் கண்டு சதானீகனைப் பற்றி விசாரித்தனர். யமதர்மன் அவர்களைச் சதானீகனிடம் அழைத்துச் சென்றார்.

சதானீகன் கொதிக்கும் நதி நீரில் தத்தளிப்பதைக் கண்டு முனிவர் மனம் வருந்தினார்.

''அரசே! எத்தனை ஹோமங்கள், யாகங்கள், தான தருமங்கள் நடத்தி இருக்கிறீர்கள்!



உங்களுக்கேன் இந்தத் தண்டனை?" என்று சோகத்தோடு கேட்டார்.

"முனிவரே! மக்கள் தந்த வரிப்பணத்தில்தான் நான் யாகங்களையும், தான தருமங்களையும் செய்தேன். நாட்டை நிர்வகிக்க உள்ள பணத்தில் நான் ஆடம்பரமாக வாழ்ந்தேன். யாகங்கள் நடத்தியதால் மாதம் மும்மாரி பொழிந்தது. நல்ல மன்னன் என்ற புகழ் கிடைத்தது. அதன் பலன் அவ்வளவுதான்! தருமத்தை, ஒழுக்கத்தை எடுத்துச் சொல்பவரும், தன் வருமானத்தில் தான தருமம் செய்பவரும், கல்வியைப் போதிப்பவரும் மட்டுமே நிஜமான தருமவான்கள். வேஷதாரிகளை விண்ணுலகம் சும்மா விடாது" என்றார் சதானீகன்.

பார்க்கவர் உடனே சூரிய வேதியரைப் பார்த்து "ஐயா! தாங்கள் யார்? யமலோகம் வரும் அளவு புண்ணியம் செய்திருக்கிறீர்கள்! கூடவே பாதி தூரம் என்னையும் அழைத்து வந்திருக்கிறீர்கள்! தயவு செய்து தங்களை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினார்.

சூரியன் தன் சுய உருவோடு வெளிப்பட்டார். "முனிவரே! யாருக்கும் 'நாளை வா' என்று பாக்கி வைக்கக் கூடாது என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்! சித்திரை மாத சதுர்த்தசி அன்று தீப தானம் செய்தால் சதானீகன் நரகத்திலிருந்து விடுபடுவான்" என்பதைச் சொல்லுங்கள் என்று கூறி மறைந்தார்.

பார்க்கவ ரிஷி பூலோகம் வந்து நடந்தது நடந்தபடி வேதியர்களிடம் கூறினார். அவர்களின் வேண்டுகோளின்படி அவர்களுடன் சென்று சதானீகன் படும் அவதியை, அவன் கூறியதை மன்னனிடம் எடுத்துரைத்தார்.

நாட்டில் யாக, ஹோமங்கள், தான தருமங்கள் நடைபெறாததால் மழை இல்லை. கள்வர்கள் மிகுந்திருந்தனர். அராஜகம் தலை விரித்தாடியது. அரசன் தவறை உணர்ந்தான்.

யாக ஹோமாதிகளைச் செய்து தான தருமங்களை வழங்கினான். மாதம் மும்மாரி பெய்தது. சித்திரை மாத சதுர்த்தசியில் ஏராளமான தீபதானம் செய்தான். இதனால் சதானீகன், நரகத்திலிருந்து விடுபட்டு சொர்க்கம் சென்றார். நாட்டில் மக்கள் உழைத்துப் பிழைத்தனர்.

புதிர் உலகம் விடைகள்

II. 37

III. நம்பக் கூடாது. 649 வருடங்கள் கழித்து இயேசு பிறப்பார் என்று அப்போதே எப்படி தெரிந்திருக்கும்?

IV. தமிழாசிரியர் "மூன்று பேர் சொன்னதும் தப்பு. ஏஞ்சல் அருவி தான் உலகிலேயே மிகவும் உயரமான அருவி" என்று கூறியிருப்பார்.

V. மாமாவின் வயது 59

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 இ	ரு	ம்	பு	■	■	■	2 ஏ	ழு
லை	3 கா	■	ப்	■	கை	ன	ன்	4 பு
■	ங்	■	வ	■	ர்	■	■	ண்
■	5 க	டை	6 சி	■	7 து	ந்	ரு	8 ம
■	■	■	■	■	■	■	■	■
ம்	த	ந்	9 த	■	சி	ட்	10 க	■
ர	■	■	ப்	■	கா	■	ல	■
11 வ	12 ர	ப்	பு	■	வ	■	13 க	ல்
14 தா	தி	■	■	■	15 சி	ல	ம்	16 பு

வியக்க வைக்கும் விளையாட்டு உலகம்!

துடிப்பான விளையாட்டு!



• சத்யன்


டேபிள் டென்னிஸ் மேஜையின் உயரம் இரண்டரை அடி. யு.கே.ஜி. படிக்கும் போது சத்தியனின் உயரம் அதுதான். அப்போதே பயிற்சியைத் துவக்கினான் 'பொடியன்' சத்யன். இன்று ஆறு வருடங்களில், பிரமிக்கத்தக்க விதத்தில் டேபிள் டென்னிஸ் விளையாட்டில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறான். மினி கேடட் என்ற பிரிவில் தமிழகத்தில் ஐந்து வருடங்களாகச் சத்தியன்தான் சாம்பியன். விளையாடும் போது அவன் மணிக்கட்டு வித்தையும், கால்களின் வேகமும் நம்மை அசத்துகின்றன. இப்போது டேபிளைவிட அரையடி உயரம்தான் வளர்ந்திருக்கிறான். எதிராளியிடமிருந்து வரும் பந்தை அவன் வேகமாகத் திருப்பி அனுப்பும் லாவகம் கண்டு பயிற்சியாளர்களே வியக்கிறார்கள். 'எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம்' என்று நம்பிக்கை வளர்க்கிறார்கள். தொடர்ந்து கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு இருக்கிறான் சத்யன்.



இவனும், இவன் வயதை உடைய சிறுவர், சிறுமியரும் டேபிள் டென்னிஸ் பயிற்சியெடுத்துக் கொண்டிருப்பது சென்னை அண்ணா நகர் வைஷ்ணவா

கல்லூரியில் உள்ள மெடிமிக்ஸ் – சந்திரா டேபிள் டென்னிஸ் அகதமியில் தான்.

மெடிமிக்ஸ் நிறுவனம் தெரிகிறது. சந்திரா யார்? இந்திய டேபிள் டென்னிஸ் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றவர்தான் சந்திரா என்று பாசத்துடன் அழைக்கப்படும் வி. சந்திரசேகர். காமன்வெல்த், ஆசிய போட்டி மற்றும் தேசியப் போட்டிகளில் வெற்றி உலா வந்தவர் இவர். விளையாட்டிற்காகக் கொடுக்கப்படும் உயர்ந்த பட்ச விருதான அர்ஜுனா விருதைப் பெற்றவர். ஒரு



ஆபரேஷனின் போது சிகிச்சை தவறாகப் போய்விட, உடல் இயக்கத்தில் பாதிப்பு. இதனால் அவரால் விளையாட முடியாத நிலையில், டேபிள் டென்னிஸ் ஆட்டத்திற்கு இந்தியாவில் நல்ல எதிர்காலத்தை உருவாக்க பயிற்சிப் பள்ளி துவங்கி விட்டார். இதற்குக் கைகொடுத்தது மெடிமிக்ஸ். மிக லேட்டஸ்டான உபகரணங்களின் உதவியோடு இங்கு டென்னிஸ் பயிற்சி நடைபெறுகிறது. 14 பயிற்சி மேஜைகள் இருக்கின்றன. சத்யன் மட்டுமல்ல. அபர்ணா, சங்கீதா, ஸ்வர்ணா போன்ற சிறுமியரும் தேசிய அளவில் சக்கை போடு போடுகிறார்கள்.

டேபிள் டென்னிஸ் ஆட்டம் சீன நாட்டிற்கு இறக்குமதியானபோது அதற்கு வைக்கப்பட்ட பெயர் பிங்–பாங். வெகு காலம் இந்தப் பெயரில் தான் அழைக்கப்பட்டு வந்தது. இருந்தாலும் இதன் வரலாறு... ஃபிரான்ஸ் தேசத்தில் துவங்கியதாகச் சொல்கிறார்கள். மழை மற்றும் பனி மூட்டம் போன்ற சமயங்களில் திறந்த வெளியில் டென்னிஸ் ஆட முடியாமல் போகவே, அதன் அடிப்படையிலேயே, வீட்டிற்குள் விளையாடும் தன்மைக்கு ஏற்ப உருவானதுதான் டேபிள் டென்னிஸ். ஃபிரான்ஸிலிருந்து இங்கிலாந்து வந்த இந்த ஆட்டம், சீனாவுக்குச் சென்ற பின் தான் பிரபலமடைந்தது. இந்தியாவிற்கு 19ம் நூற்றாண்டில்தான் வந்தது. 1988ம் வருடம்தான் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் சேர்க்கப்பட்டது. இன்று சீனா நம்பர் ஒன். இந்தியாவிற்கு 45வது இடம். இதை மாற்றத் தான் தனது உடல்நிலை சரியில்லாத போதும் உழைப்பைக் கொடுக்கிறார் சந்திரசேகர்.


டென்னிஸ் ஆடப்படும் டேபிளின் நீளம் ஒன்பது அடி. அகலம் ஐந்தடி. இந்த ஆட்டத்தை ஆட, பயன்படுத்தப்படும் 'சப்பாத்தி' வடிவ மட்டைகள் (BAT) 150 ரூபாயிலிருந்து 2000 ரூபாய் வரை விற்கப்படுகின்றன. கடையிலிருந்து வெறும் மட்டையை மட்டும் வாங்கினால் போதாது. அந்த மட்டையை வாங்கி இருபுறமும் கறுப்பு, சிவப்பு ரப்பர் ஷீட்டை ஒட்ட வேண்டும். ஒட்டப்படும் இந்த ரப்பர் ஷீட்டுக்கு ஏற்ப ஆட்டத்தில் நீங்கள் அடிக்கும் பந்தின் வேகம் அதிகரிக்குமாம். எனவே தரமான மேல்நாட்டு ரப்பர் ஷீட்டுகளை மட்டைகளில் ஒட்டுகிறார்கள். பிளாஸ்டிக் தொழில்நுட்பம் வருவதற்கு முன்பு ரப்பர் பந்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது பயன்படுத்தப்படும் சிறிய முட்டை வடிவிலான பிளாஸ்டிக் பந்து தயாரிப்பில் சிறப்பான இடம் பெற்றிருப்பதும் சீனாதான். ஐஸ்

ஹாக்கிக்குப் பிறகு உலகிலேயே வேகமாக ஆடப்படும் ஆட்டம் டேபிள் டென்னிஸ்தான். பிரபல கிரிக்கெட் வீரர்களான கவாஸ்கர், சச்சின் ஆகியோர் சிறுவயதில் டேபிள் டென்னிஸ் பயிற்சியில்தான் முதலில் இறங்கினார்களாம்.

"ஐந்து வயதிலேயே பயிற்சியைத் துவக்குவதுதான் சரியான அணுகுமுறை" என்கிறார் பயிற்சியாளர் ஆண்ட்ரூ. முதலில் மட்டையை எப்படி பிடிப்பது என்று கற்றுத்தரப்படுகிறது. அடுத்து பந்தை எதிர்புறத்தில் எப்படி அடித்துத் தள்ளுவது என்று சொல்லித் தரப்படுகிறது. அதன் பிறகு அடித்தாடுதலும்,(attack) தடுத்தாடுதலும் (defence) கற்றுத்தரப்படுகின்றன. பல மாதங்கள் நீளும் இந்தப் பயிற்சியின் தொடர்ச்சியாக வேகமாக அடித்தாடுதல் கற்றுத் தரப்படுகிறது. இப்போதெல்லாம் தடுத்தாடுவதை விட வேகமாக அடித்தாடுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கடைசியாக வேகத்துடன் சுழல் தன்மை இழையோடும் வகையில் அடிக்கக் கற்றுத் தருகிறார்கள். அதன் பின் உங்கள் பயிற்சியே உங்களை வழிநடத்தும்.

டேபிள் டென்னிஸ் ஆட்டத்தில் மொத்தம் பதினோரு பாயிண்டுகள். இதை யார் முதலில் எடுக்கிறார்களோ அவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுகிறார்கள். ஒரு போட்டியில் மொத்தம் ஐந்து அல்லது ஏழு ஆட்டங்கள் இருக்கும். இதில் பெரும்பான்மையான ஆட்டங்களில் வென்றவர் வெற்றி வீரராகிறார். போட்டிகளில் ஐந்து பிரிவுகள் இருக்கின்றன. மினி கேடட் என்பது பத்து வயதிற்குள் உள்ளவர்களுக்கு. அதன் பின் கேடட் (10-12வயது) ஸப்ஜூனியர் (12 - 14), ஜூனியர் (14-17) ஸீனியர் (17 வயதுக்குபின்). இப்போது இந்தியாவில் மேற்கு வங்க மாநில ஆட்டக்காரர்கள் தேசியப் போட்டிகளில் வெற்றியைக் குவிக்கிறார்கள். அதற்கடுத்து தமிழ்நாடு... இந்த நிலையை மாற்றி தமிழ்நாட்டை முதல் இடத்துக்குக் கொண்டு வரப் பாடுபடுகிறார்கள் சந்திரசேகரும் அவரது தலைமையில் உள்ள பயிற்சியாளர்களும்.

"இது மிக வேகமாக ஆடப்படும் ஆட்டம். குறுகிய மேஜையில் ஆடப்படுவதால் வேகமாக வரும் பந்தை எதிர்கொண்டு திருப்பி அடிக்க சுறுசுறுப்பும் கூர்மையான கவனமும் தேவை. எனவே டேபிள் டென்னிஸ் பயிற்சியில் ஈடுபடும் சிறுவர், சிறுமியருக்கு, ஒரு மனதிடம் உருவாகும். எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கும். அவர்கள் வளர, வளர வாழ்க்கையில் பல சூழல்களில் எடுக்கிற முடிவுகளை வேகமாகவும் சரியாகவும் எடுக்க முடியும்" என்கிறார்கள் பயிற்சியாளர்கள் அசோக்குமார், புருஷோத்தமன், ஸ்ரீதர் மற்றும் கஜேந்திரன். சென்னையில் உள்ளது போன்றே மிகச் சிறப்பானதொரு அகதமியை மத்திய அரசின் பெட்ரோலிய இலாக்கா ராஜஸ்தான் மாநிலம் ஆஜ்மீரில் நடத்திக் கொண்டு வருகிறது. அங்கு ஸீனியர் லெவலில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. நாடெங்கிலும் இருந்து நன்கு பளிச்சிடும் சிறுவர், சிறுமியரை பெட்ரோலிய இலாக்கா தத்தெடுத்து ஆஜ்மீருக்கு அழைத்துக் கொண்டுபோய் தங்குமிடம், படிப்பு மற்றும் ஆட்டப் பயிற்சி கொடுத்து தயார் செய்கிறது. 45வது இடத்தில் இருந்து முன்னேற வேண்டுமே!




• வி. சந்திரசேகர்

— ப்ரியன்

படங்கள்: ராஜன்


வரம் கேட்ட காகங்கள்!

கதை : க. செளம்யாமணி
ஒன்பதாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் பெ.மே.நி.பள்ளி,
தூத்துக்குடி.
படம்: மகேஸ்





காகங்கள் மனம் வருந்தின.
நாம் அழகாக இல்லைன்னு கிளி துரத்தியது.
குரலுக்காக குயில் துரத்தி விட்டது.
வாங்க, வன தேவதையிடம் முறையிட லாம்.
காகங்கள் வன தேவதையிடம் முறையிட்டன.
ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொருவிதமான உருவம், குரல்னு ஏற் கெனவே படைக்கப் பட்டதை இனி மாற்ற முடியாது.
வேறு வழியில்லையா?
ம்...சரி. உங்களுக்கு என்று ஒரு சிறப்பு அந்தஸ் தைத் தருகிறேன். உங்களைப் பிடித்து யாரும் கூண்டில் வளர்க்க மாட்டார்கள். சுதந்திரமா இருக்கலாம்.
இன்னும் சிறப்பா வரம் கொடுங்கள்.
இன்றுமுதல் கடவுளுக்காக விரதம் இருப்பவர்களும், முன்னோர்களைக் கும்பிடறவங்களும் முதலில் உங் களுக்குத்தான் உணவு படைப்பார்கள்.
தேவதையே நன்றி. வருகிறோம்.



உலகில் பாதிபேர் டெலிபோனில் பேசியதில்லை!

முதலில் ஒரு புதிர்: சாதாரணமான ஆனால் சுவாரசியமான புதிர்தான். முயற்சி செய்து விடை சொல்லுங்கள் பார்க்கலாம்!

1978ம் வருடம் மே மாதம் ஆறாம் தேதி, பகல் பன்னிரெண்டு மணி, முப்பத்து நான்கு நிமிடம். இதற்கு என்ன விசேஷம் என்று சொல்லுங்கள்.


தெரியவில்லையா? பரவாயில்லை. இப்பகுதியின் இறுதியில் விடை தரப்பட்டுள்ளது. பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

உலகமெங்கும் ஈமெயில் மூலமாக பலரும் ஒருவருக்கொருவர் அனுப்பிக் கொண்டிருக்கிற தமாஷ் துணுக்கு இது. சிறுவர்கள் மீது மிகவும் கரிசனம் கொண்ட யாரோதான் இதை ஆரம்பித்து வைத்திருக்க வேண்டும்.

- கடவுள் தப்பு செய்தால் அதை 'விதி' என்று சொல்கிறோம்.
- ஒரு முடி திருத்துபவர் தப்பு செய்தால் அதை புது ஹேர் ஸ்டைல் என்று சொல்கிறோம்.
- ஒரு கார் ஓட்டுபவர் தப்பு செய்தால், அதை விபத்து என்று சொல்கிறோம்.
- ஒரு டாக்டர் தப்பு செய்தால், அதை ஆபரேஷன் என்று சொல்கிறோம்.
- ஒரு அரசியல்வாதி தப்பு செய்தால், அதை சட்டம் என்று சொல்கிறோம்.
- ஒரு விஞ்ஞானி தப்பு செய்தால், அதைப் புதுக் கண்டுபிடிப்பு என்று சொல்கிறோம்.
- ஒரு டைலர் தப்பு செய்தால், அது புது ஃபேஷன் என்று சொல்கிறோம்.
- ஒரு ஆசிரியர் தப்பு செய்தால், அதை ஒரு புதிய பாடம் என்று சொல்கிறோம்.
- ஒரு சிறுவன் தப்பு செய்தால், அதை 'தப்பு' என்று ரொம்பப் பெரிது படுத்துகிறோமே அது ஏன்?

அடுத்து 'நம்பினால் நம்புங்கள்' ரகத்தில் சில தகவல்களைப் பார்க்கலாமே!

- இன்றும்கூட, உலக ஜனத்தொகையில் ஐம்பது சதவீதத்துக்கு அதிகமானவர்கள் டெலிபோனில் பேசிய அனுபவம் இல்லாதவர்கள்.
- குட்டிப் போட்டு, எண்ணிக்கையைப் பெருக்குவதில் எலிக்கு ஈடு வேறு எதுவுமில்லை. இரண்டே இரண்டு எலிகள், பதினெட்டு மாத காலத்தில் பத்து லட்சம் எண்ணிக்கையைத் தொட்டு விடும்.
- பன்றிகளால், தலையை உயர்த்தி, வானத்தை





அண்ணாந்து பார்ப்பது இயலாத காரியம்.

● பதினேழாம் நூற்றாண்டு வரை, ரஷ்யாவில் தோலினால் செய்யப்பட்ட கரன்ஸி நோட்டுதான் புழக்கத்தில் இருந்தது.

● போயிங் 747 ரக விமானத்தின் எரிபொருள் டாங்க், சுமார் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் லிட்டர் எரிபொருள் கொள்ளளவு கொண்டது.

அடுத்து நெட் ஜோக்ஸ். இது ஒரு புத்திசாலி விற்பனைப் பிரதிநிதி பற்றிய ஜோக்.

சூப்பர் மார்க்கெட்டில், ஒரு விற்பனைப் பிரதிநிதி, தங்கள் கம்பெனி தயாரிப்பான 'உடையாத' சீப்பின் பெருமைகளை விவரித்துக் கொண்டிருந்தான்.

சீப்பைக் கீழே வீசி எறிந்தான். இப்படி வளைத்துக் காட்டினான்; அப்படி வளைத்துக் காட்டினான்.

''இன்னமும் யாருக்காவது நம்பிக்கையில்லையா?' இதோ பாருங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே சீப்பை இரண்டாக மடித்தான்.

'பட்'டென்று சீப்பு உடைந்து இரண்டு பாதியானது.

''என்னவோ அவ்வளவு பெருமையாகச் சொன்னாய். இப்போது பார்த்தாயா? உன் உடையாத சீப்பும் உடைந்துவிட்டதே!'' என்று ஒரு குறும்புக்காரர் கிண்டலாகக் கேட்டார்.

அதற்கு புத்திசாலியான விற்பனைப் பிரதிநிதி, சமயோஜிதமாகச் சொன்ன பதில் என்ன தெரியுமா? ''இத்தனை உறுதியாக இருக்கிறதே இந்தச் சீப்பு! இதற்குள்ளே என்னதான் இருக்கும் என்று அறிந்து கொள்ள உங்களில் சிலருக்கு ஆர்வம் இருக்கும். அதற்காகத்தான் சீப்பைக் கஷ்டப்பட்டு உடைத்தேன்!''

இது ஒரு டாக்டர் ஜோக். ஒரு டாக்டரின் கிளினிக்கில், வாஷ்பேசின் ரிப்பேர் ஆகிவிட்டது. குழாய் ரிப்பேர் செய்பவருக்கு டெலிபோன் செய்தார் டாக்டர்.

குழாய் ரிப்பேர் செய்பவர் வந்தார். பத்தே நிமிஷத்தில் ரிப்பேரைச் சரி செய்துவிட்டு, இருநூறு டாலருக்குப் பில் கொடுத்தார்.

''ஐயோ! இவ்வளவு தொகையா? ஒரு டாக்டரான நானே பத்து நிமிடத்தில் இருநூறு டாலர் சம்பாதிக்க முடியவில்லையே!'' என்று ஆதங்கப்பட்டார் டாக்டர்.

குழாய் ரிப்பேர் செய்ய வந்தவர் சொன்னார்: ''நீங்கள் சொல்வது ரொம்ப



சரி! டாக்டராக இருந்தபோது என்னால்கூட இப்படி சம்பாதிக்க முடியவில்லை. அதனால்தான் தொழிலை மாற்றிக் கொண்டு விட்டேன்!''

கடைசியாக ஆரம்பத்தில் சொல்லப் பட்டுள்ள புதிருக்கு விடை: நேரம், மாதம், தேதி, வருடம் இந்த வரிசையில் கொடுத்துள்ள விவரங்களை எழுதிப் பார்த்தால் ஒன்று முதல் எட்டு வரை இப்படி வரிசையாக வரும். 12:34, 5/6/78

- கௌதம் ராம்

மூட முடியாத வாய்!

கொ.மா. கோதண்டம்

கணேசன், முருகேசன், குட்டியப்பன், பூங்குன்றன், பூங்கோதை, கண்ணன் ஆகிய மாணவர்கள் ஞாயிறன்று மலையடிவார அருவிக்குக் குளிக்கச் சென்றனர். சைக்கிள்களை ஆலமரத்தடியில் வைத்துவிட்டு ஆதிவாசிகள் குடிசைப் பக்கம் சென்று நீலனை அழைத்துக் கொண்டு அருவிக்குக் கிளம்பினர்.

தூரத்து ஆற்றில் ஒரு இடத்தைப் பார்க்குமாறு நீலன் கைநீட்டிக் காட்டவே மாணவர்கள் அந்த இடத்தைப் பார்த்தனர். மரக் கிளைகளிலிருந்த குரங்குகள் ஆற்று நீரில் குதிப்பதும் நீந்திக் கரையேறி மரக்கிளைக்குத் தாவி மறுபடியும் நீரில் குதிப்பதுமாக விளையாடிக் கொண்டிருந்தன.

''அட அனிமல் பிளானட் சீரியல் பார்த்த மாதிரியில்லே இருக்கு'' என்றான் கணேசன்.

''என்ன நீலா, நம்மை மாதிரியில்லே குதிச்சு விளையாடுது'' இது குட்டியப்பன்.

''ஆமாம் குரங்குகள் நமக்கு மூதாதையர்தானே'' என்றான் பூங்குன்றன்.

''டார்வின் சித்தாந்தத்தை அப்படியே முழுவதுமாக ஒத்துக் கொள்ள முடியாதுன்னு ஒரு ஆராய்ச்சியாளர் சொல்லியிருக்காரே'' என்றாள் பூங்கோதை.

''அப்ப நாம என்ன புலி இனத்துல இருந்தா வந்தோம்?'' என்றான் முருகேசன்.

''சரி, இப்ப நம்ம ஆராய்ச்சி முடியாது. வாங்க குளிக்கப் போகலாம்'' என்றான் கண்ணன்.

அவர்கள் ஆற்றில் குளித்தார்கள். பிறகு பாறைகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். கணேசன் கடலைப் பருப்பு பொட்டலங்களை ஆளுக்கொன்றாகத் தந்தான். நீலன் ஒரு ஓரமாகக் குளித்துக் கொண்டிருந்தான். அவர்கள் கடலைப் பருப்பைத் தின்று கொண்டே நீலனை அருகில் அழைத்தனர்.

''நீலா வனத்துல நடந்த விஷயம் ஏதாவது சொல்லேன்.''

''ஆமாப்பா நீ சொல்லு. நாங்க கேட்கறோம்'' - கணேசன்

''ஏய், நீலனுக்குக் கடலைப் பொட்டலம் தரலையா?''

''அடடா! மறந்துட்டேனே! இந்தா நீலா சாப்பிட்டுக்கிட்டே சொல்லு.''

''சாமிகளா, நேத்து ஒரு சம்பவம் நடந்தது...''

''சொல்லு நீலா'' - என்றனர் அனைவரும் ஆர்வம் பொங்க.

''கொஞ்சம் வடக்கே தள்ளி அடிவாரத்துல ஒரு மாந்தோப்பு இருக்கு. காலையில புதுசா காவலுக்கு ஒரு ஆளைப் போட்டிருக்காங்க. அந்த ஆளு ஒரு இளவட்டம். நான் அடிவார விளாமரத்துல ஏறி விளாம்பழம் பறிச்சிக்கிட்டு இருந்தேன். அப்ப பார்த்து ஒரு யானை இறங்கி தோப்புக்குள்ள வந்திருச்சு. வேலிப்பக்கம் மேஞ்சுகிட்டு இருந்துச்சு. அனுபவமில்லாத இந்தாளு யானையை எருமை மாடாட்டம் நெனச்சிகிட்டுப் பக்கத்துல போயி மண்ணாங்கட்டி எடுத்து யானை மேல வீசி வெரட்டியிருக்கார். திரும்பிய யானை கோபத்துல பெரிய சத்தம் போட்டு அவரை விரட்டியிருக்கு'' - நீலன்.

''அட அறிவில்லாதவன், யானைக்குப் பக்கத்துல போயா விரட்டுவான்?'' இளங்கோ.

''கேளுங்க. அவன் ஓட, யானை பின்னால ஓட நானும் பயந்துட்டேன். உடனே நான் மரத்துல இருந்தபடியே, வெள்ளை வேட்டியைக் கழட்டிப் போட்டுட்டு ஓடுங்க சாமின்னு கத்தினேன். அப்படியே அந்தாளு வேட்டியைக் கழட்டி ஒரு புதர்ல போட்டுட்டு ஓடினார். பின்னால வந்த யானை கோபத்துல வேட்டியோட புதரையும் பிச்சி நாசமாக்கிப் போட்டுருச்சு. ஓடின ஆளு கல்லுல கால் தட்டி தொப்புன்னு கீழே விழுந்திட்டாரு. வேறொரு புதர் மறைவுல அவரு விழுந்ததால ஆளைக் காணோமுன்னு யானையும் திரும்பிப் போயிடிச்சி. அப்புறம் நான் இறங்கி

வந்து அந்தாளைத் தூக்கி ரூம்ல விட்டுட்டு வந்தேன்.''

''எதுக்கு நீலா வேட்டிய சுழட்டிப் போடச் சொன்னே?'' - பூங்கோதை.

''யானைக்கு வெள்ளை நிறம் பிடிக்காது. சுழட்டிப் போட்டா அதுல போயி கோபத்தைக் காட்டும். அதுக்குள்ள நாம தப்பிச்சிடலாம்'' - நீலன்.

கரைப் பக்கம் ஏதோ சத்தம் கேட்கவே அவர்கள் அங்கே திரும்பிப் பார்த்தனர். காட்டுக் கோழி ஒன்றை ஒரு நரி துரத்திக் கொண்டு ஓடியது. கோழி பறந்து மரக்கிளையில் ஏறிக் கொண்டது. கரைப்பக்கம் யாரோ வருவது தெரிந்தது. நீலன் உட்கார்ந்திருந்த பாறையருகில் ஒருவர் வந்தார்.

''டேய் இறங்கி அங்குட்டுப் போடா. நான் இந்தப் பாறையில சோப்புப் போடணும்'' அதட்டலாகப் பேசியதும்,

''சரி சாமி'' என்ற நீலன் போய் வேறு இடத்தில் அமர்ந்து கொண்டான்.

புதிதாக வந்தவர் சோப்புப் போட்டுக் கொண்டிருந்தார். அடிக்கடி பெரிதாக வாயைத் திறந்து கொட்டாவி விட்டுக் கொண்டே இருந்தார்.

''என்ன இந்தாளு அடிக்கடி கொட்டாவி விட்டுக்கிட்டே இருக்காரு?''


''நாலு நாளா தூங்கியிருக்கமாட்டாரு!''

''தம்பிகளா நான் கொட்டாவி விடுறது இருக்கட்டும். நீங்க படிச்ச புள்ளைகள். இந்தக் காட்டுப் பயல சரிசமமா வச்சிக்கிட்டு பேசிக்கிட்டு இருக்கீங்களே என்னப்பா இது?''

''ஐயா, நாங்க எல்லாரும் ஒண்ணுதான்னு நினைக்கறவங்க. படிப்பு அதைத்தானே சொல்லுது? இதுல காட்டான், நாட்டான் அப்படின்னு வித்தியாசமெல்லாம் இல்லேங்க'' முருகேசன் கூறினான்.

''சரி எப்படியும் இருங்க ஆவ்வ்.. படிச்ச பையங்க. ஒண்ணும் தெரியாத, படிக்காத பயகிட்ட கேள்வி கேட்டுக்கிட்டு இருக்குறது எனக்குப் புடிக்கலே. அதான் சொன்னேன்'' என்றார் புதியவர்.

அவர் கொட்டாவி விட்டுக் கொண்டே துணிகளுக்குச் சோப்புப் போட ஆரம்பித்தார். ஆற்றில் தண்ணீர் தெளிவாக இருந்ததால் அடிப்பகுதி மணல் பளிச்செனத் தெரிந்தது.



ஓவியப் போட்டி

உயர்ந்து நிற்கும் தேவாலயங்களைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு தேவாலயம் (சர்ச்)தான்! ஓவியம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறக்காமல் குறிப்பிடுங்கள். கடைசி தேதி 6.9.2002

அதிலே சிறிதும் பெரிதுமான கற்கள் இருந்தன. மாணவர்கள் நீரில் மூழ்கி அந்தக் கற்களை எடுத்து எறிந்து விளையாடினார்கள்.

நீலன் நீருக்குள்ளே மூழ்கியவாறே நீந்திக் கொண்டிருந்தான். அவன் மேலே வந்தபோது கைகளில் பளபளவென்று சில கற்கள் இருந்தன. விதவிதமான கற்களை மாணவர்கள் ஆளுக்கொன்றாகப் பறித்துக் கொண்டார்கள்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது 'ஆ...' என்று ஏதோ சத்தம் கேட்டது. சோப்புப் போட்டுக் கொண்டிருந்தவர்தான் அப்படி சத்தம் செய்தார்.

மாணவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அவரது கொட்டாவி விட்ட வாய் அப்படியே இரு தாடைகளும் மூட முடியாமல் பெரிதாக திறந்தே இருந்தது.

'ஆ... ஆ...' என்று சத்தம் போட்டார். மாணவர்கள் அருகில் சென்று அவரைக் கரைக்கு அழைத்து வந்தனர். அவரால் பேச முடியவில்லை. வாயைப் பெரிதாகத் திறந்ததால் இரண்டு தாடைகளும் சேர்ந்த இடத்தில் விலகி அப்படியே நின்றுவிட்டன.

''அடடா! இப்படியாயிடிச்சே என்ன செய்ய?''

''இவரை டாக்டர்கிட்டதான் காட்டணும்.''

மாணவர்கள் ஆளாளுக்குப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது கணேசன் ''கொஞ்சம் கேளுங்க. எங்க தெருவுல ஒரு ஆளுக்கு இப்படித்தான் ஆச்சு. நாங்க டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போனோம். ரொம்ப நேரம் பெருசா கொட்டாவி விடும் போது தாடை மூட்டு விலகி நின்னுடுமாம். அப்புறம் துணியைப் பந்துபோல சுருட்டி பற்களுக்கு இடையில வச்சிட்டு கையை வாயிக்குள்ள குடுத்து தாடை சேருற இடத்துல அப்படியே அசைச்சு விட்டு ஏதோ செஞ்சாரு. சரியாப் போச்சு. துணிப் பந்து வக்கல்லேன்னா அவர் விரல்களில் பல்லு பட்டுடுமாம்.''

''இப்ப இவரை நாம சைக்கிள் பின்னால உட்கார வச்சு கூட்டிட்டுப்போய் டாக்டர்கிட்ட காட்டணும்''

''இவர் வேதனையில அழுதுகிட்டே அவ்வளவு தூரம் சைக்கிளைப் புடிச்சிட்டு வருவாரா?''

''என்னப்பா நீலா நீ என்ன சொல்றே?'' என்றான் பூங்குன்றன்.

''ஆமாம் இந்நேரம் வரை அவனை மறந்திட்டோமே'' என்றாள் பூங்கோதை. நீலன் வந்து அவர் வாயை உற்றுப் பார்த்தான்.

''கொஞ்சம் இருங்க சாமி. நான் வர்றேன்'' என்றவன் குடிசைக்கு ஓடினான். கொஞ்ச நேரம் கழித்து வந்தான். அவன் கையில் ஏதோ இருந்தது. இன்னொரு கையில் தேன் பாட்டில் இருந்தது.

''எல்லாரும் தள்ளி நில்லுங்க.'' என்றவன் சிரட்டையில் உள்ளதை அவர் திறந்த வாய்க்குள் வீசினான்.

அவர் ஐயோ என்று அலறி வாயிலிருந்ததைக் கீழே துப்பினார். வாய் அசைய ஆரம்பித்தது.

மாணவர்கள் மகிழ்ச்சியாகக் கத்தினர். ''இருங்க சாமி'' என்றவன் அவர் அருகில் சென்று வாயில் சிறிது தேனை ஊற்றினான்.

''என்னப்பா நீலா மொதல்ல அவர் வாயில என்ன போட்டே? இப்ப என்ன செய்யறே?'' - கண்ணன்.

''வாய் தாடை விலகி நின்னுச்சின்னா நாங்க இப்படிதான் வைத்தியம் செய்வோம். கொள்ளுப் பயிறை நல்லா வறுத்து அதை வாயில போட்டேன். சூடுதாங்காமல் வாய் அசைக்கும்போது தானா சரியாப் போகும். அந்தச் சூடு உதட்டுலயும் நாக்குலயும் பட்டிருக்குமில்லே. அதுக்கு இப்ப தேன் விட்டேன். இனிமேல் எல்லாம் சரியாப் போகும். ஒரு நாள் வாய் புண்ணாக இருக்கும். நாளைக்குச் சரியாப் போகும்'' என்றான் நீலன்.

''நீலா, நீ பெரிய டாக்டர்தாம்பா. உன்னால எங்க எல்லாருக்கும் சிரமம் இல்லாமல் செஞ்சிட்டியே!''

அவர் மெல்ல நீலன் அருகில் வந்து அவன் கைகளைப் பிடித்து திக்கித் திணறி நன்றி தெரிவித்தார்.

மாணவர்கள் நீலனைத் தோளில் தூக்கிக் கொண்டு கொண்டாடினர்.



ஓவியப் போட்டி முடிவுகள்!

முதல் பரிசு: கே.எஸ். கண்ணன்,
இராசிபுரம்.
நாமக்கல் மாவட்டம்.



இரண்டாம் பரிசு: எஸ். ராகவேந்திரன், ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, ஆர்.கே. பேட்டை.

மாருதி

ஆகஸ்ட் இதழில் 'குரங்கார்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஐந்து மாருதிகள் உங்கள் பார்வைக்கு...



மூன்றாம் பரிசு: எஸ். பிரபு, தேனி.

ஆறுதல் பரிசு:
எஸ். ஜெயசக்திவேல்,
பன்னிரண்டாம் வகுப்பு,
ஜி.ஹெச்.எஸ். பள்ளி, திருத்துறைப்பூண்டி.



ஆறுதல் பரிசு:
சு. ராஜலெக்ஷ்மி,
திருநெல்வேலி.





கோகுலம் நியூஸ்

● ஜூலை 26ந் தேதி அணு சக்தி விஞ்ஞானி டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றுக் கொண்டார். பாரத ரத்தினா பெற்ற முதல் குடியரசுத் தலைவர் இவர்.

● வாசனையை நுகர்வதில் ஆண்களை விடப் பெண்கள் சாமர்த்திய சாலிகள் என்பதும், நல்ல வாசனை சிறந்த வலி நிவாரணியாக அதிக அளவில் செயலாற்றுகிறது என்பதும் ஓர் ஆய்வின்போது தெரியவந்துள்ளது. கனடா நாட்டின் கியூபெக் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வு இதைத் தெரிவிக்கிறது. சுடு தண்ணீரில் 20 ஆண்களையும் 20 பெண்களையும் கைகளை நனைக்கச் சொல்லி இருக்கின்றனர். அப்போது அந்த இடத்தில் பல்வேறு விதமான வாசனைகளை நுகரச் சொன்னார்கள். ரோஜா போன்ற நல்ல மணத்தை நுகர்ந்த பெண்கள் தங்கள் வலி குறைந்து இருப்பதாகக் கூறினர். அதே சமயம் துர்நாற்றத்தை உணர்ந்தவர்களுக்கு வலி அதிகமாகத் தெரிந்திருக்கிறது. ஆண்களுக்கு நல்ல மணம், கெட்ட மணத்தால் எந்த மாற்றமும் நிகழவில்லை.

● இரண்டு கிலோ மீட்டர் அகலமுள்ள பெரிய விண்கல் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அது பூமியைத் தாக்கும் வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 2002 என்டி7 என்று இந்த விண்கல்லுக்குப் பெயரிடப்பட்டு உள்ளது. 2019ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதி இந்த விண்கல் பூமிக்கு அருகில் வர வாய்ப்புள்ளது. ஒரு வேளை அது பூமியில் மோதினால் பேரழிவு ஏற்படும். அது பூமியைத் தாக்குவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவுதான் என்பது ஆறுதல்.

● பிரிட்டனில் தனது எஜமானரின் படகில் சென்று கொண்டிருந்த நாய் ஒன்று தவறி கடலில் விழுந்து விட்டது. அது தண்ணீருக்குள் மூழ்காமலும் இயந்திரப் படகுகள், எண்ணெய் கப்பல்கள், பாய்மரப் படகுகளில் சிக்கி விடாமலும் சாமர்த்தியமாக நீந்திக் கரையை அடைந்துவிட்டது. இந்த அதிசய சம்பவம் பிரிட்டனின் தெற்கு ஆங்கிலக் கால்வாய்ப் பகுதியில் நடந்துள்ளது. 2 வயதாகும் அந்த நாய் 26 கி.மீட்டரை நீந்திக் கடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

● ஜெர்மனியின் பிரதமர் ஜெரால்டு ஹுரோடர் பழையதாகிவிட்ட ஃபோக்ஸ் வாகன் காரில்தான் பயணம் செய்கிறார். 2 அறைகளைக் கொண்ட சிறிய அடுக்கு மாடிக் குடியிருப்பில்தான் வசிக்கிறார். விடுமுறையைக் கழிக்க வெளியூர்களுக்குச் செல்லும்போது குறைந்த கட்டணம் வசூலிக்கும் விமானத்தில்தான் பயணம் மேற்கொள்கிறார்.

● இந்திய ரயில்வேயின் 150வது ஆண்டு விழாவை ஒட்டி சென்னை - திருவள்ளூர் இடையே ஆகஸ்ட் 4ந் தேதி ஒரு சிறப்பு ரயில் விடப்பட்டது. இது நீராவி எஞ்சினால் இயக்கப்பட்டது. ரயில் பெட்டிகள் முழுவதும் பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஏராளமான குழந்தைகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். இதில் தேசபக்தி பாடல்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டன.

பதக்கம் குவித்த இந்தியர்கள்!


• ஜஸ்பால் ராணா


• அஞ்சலி பகவத்

மான்செஸ்டரில் காமன் வெல்த் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. 'பிரிட்டிஷ் எம்பயர் கேம்ஸ்' என்று அழைக்கப்பட்ட காமன் வெல்த் போட்டிகளில் அதிகபட்சமாக 72 பதக்கங்களைக் குவித்து இந்தியா அபார சாதனை படைத்திருக்கிறது. உலக அரங்கில் விளையாட்டுப் புலிகளாக விளங்கி வரும் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளன. அடுத்த இடத்துக்கு வர வேண்டிய கனடாவைப் பின்னுக்குத் தள்ளி 32 தங்கம் பெற்ற இந்தியா மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

துப்பாக்கி சுடுதல், பளு தூக்குதல் ஆகிய பிரிவுகளில் உள்ள வீரர், வீராங்கனைகளின் பங்கு மிகவும் பாராட்டத்தக்கது. 32 தங்கப் பதக்கங்களில் 27 பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளனர் இவ்வீரர்கள். துப்பாக்கி சுடுதலில் ஜஸ்பால் ராணாவும், அஞ்சலி பகவத்தும் அபாரமாக விளையாடியிருக்கின்றனர்.

காமன் வெல்த் போட்டிகளில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட பளு தூக்குதலில் இந்திய வீராங்கனைகள் 3 தங்கப்பதக்கங்களை அள்ளினர்.

இந்திய மகளிர் ஹாக்கி குழுவும் தங்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் எந்தவொரு இந்திய வீராங்கனையும் தடகளத்தில் பதக்கம் வென்றதில்லை. அதை முறியடித்துள்ளார் தமிழக வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜ். நீளம் தாண்டுதலில் இவர் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

17 பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் 72 நாடுகளில் இருந்து 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

பதக்கம் குவித்த வீரர்களை மேலும் உற்சாகப்படுத்தும் விதமாக மத்திய அரசு இதுவரை இல்லாத அளவுக்குப் பரிசுத் தொகையை அறிவித்துள்ளது. தங்கம் வென்றவருக்கு ரூ. 20 லட்சம், வெள்ளிக்கு 15 லட்சம், வெண்கலத்துக்கு 10 லட்சம் ரூபாய் அளிக்கப்பட உள்ளது. அடுத்த மாதம் நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் நம் நாட்டின் சாதனை தொடரும் என்று நம்புவோம்!

நூற்றாண்டின் சிறந்த வீரர் கபில்தேவ்!

உலகக் கோப்பையை இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுத்த கபில்தேவ் கடந்த நூற்றாண்டின் சிறந்த இந்திய கிரிக்கெட் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லண்டனில் சிறப்பு வாய்ந்த விஸ்டன் விருது கபில்தேவுக்கு வழங்கப்பட்டது. 16 பேர் இவ் விருதுக்குப் போட்டியிட்டனர். இறுதிக் கட்டத்தில் கவாஸ்கர், டெண்டுல்கர், கபில்தேவ் ஆகியோர் மட்டும் இருந்தனர். இறுதியில் கபில்தேவ் விஸ்டன் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1985ஆம் ஆண்டு கவாஸ்கர் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணியே சிறந்த அணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கடந்த நூற்றாண்டின் மக்கள் நாயகனாக சச்சின் டெண்டுல்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கோல்கத்தாவில் கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக வி.வி.எஸ். லக்ஷ்மண் 281 ரன்கள் குவித்ததே நூற்றாண்டின் சிறந்த ஆட்டமாகத் தேர்வு பெற்றது.


• கபில்தேவ்

விளையாட்டு அரங்கம்

உங்கள் நூலகம்



பெற்றோர்

ஆலம் விழுது - பூவண்ணன்-பக்.80-ரூ.30-சாதனா பதிப்பகம், 68, சின்னசுப்பண்ணன் தெரு, கே.கே. புதூர், கோவை - 641 038.

சிறுவர் இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான ஆசிரியரின் புகழ் மிக்க படைப்பு. தந்தை தாங்கள் கேட்பதை வாங்கித் தராது கருமித்தனமாக நடந்து கொள்கிறார். வரவு செலவுப் பொறுப்பைத் தங்களிடம் கொடுத்தால், மிச்சம்கூடப் பிடிக்கலாம் என்ற எண்ணத்தோடு உள்ள குழந்தைகளிடம் அப்பா வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைக்கிறார். ஒரு மாதத்திலேயே குழந்தைகள் தங்கள் எண்ணம் எத்தனை தவறானது என்பதையும் அவசிய செலவுகளைக் கூட சமாளிக்க முடியாது பெற்றோர் படும் துன்பமும் தியாகமும் எத்தகையது என்பதையும், உணர்ந்து தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறார்கள். தொடர்கதையாக ஆனந்த விகடனில் வெளிவந்த போதே ஆயிரக் கணக்கான வாசகர்களின் நெஞ்சைக் கவர்ந்த பெருமைக்குரியது. தமிழ் உள்பட நான்கு மொழிகளில் திரைப்படமாக வெளி வந்து பல பரிசுகளை வென்றது.

என்னை ஜெயிக்க விடுங்க - கே.வி. வெங்கடேஷ்- பக்.84- ரூ.25 - மணிமேகலைப் பிரசுரம், 7 தணிகாசலம் சாலை, தியாகராயநகர், சென்னை - 600 017.

வித்தியாசமான முடிவுகளைக் கொண்ட ஒரு பக்கச் சிறுகதைகளின் தொகுப்பு. கதை கூறத் துடிப்போர்க்கும் பேச்சாளர்களுக்கும் நன்கு பயன்படக் கூடிய புத்தகம். படங்களும் அழகூட்டுகின்றன.

மரத்தடி நிழலில் - வி.என்.எஸ். உதயசந்திரன் - பக்.92 - ரூ.150 - பூபாலசிங்கம் புத்தக சாலை, 340, செட்டியார் தெரு, கொழும்பு - 11

சிறுவர் இலக்கியத்திற்கு இது ஒரு புதிய வரவு. பள்ளிப் பாட நூல்களில் 'உரையாடல் பகுதி என்று ஒரு பகுதி இருக்கும். உரையாடல் என்பது எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதற்கு அது ஒரு முன் மாதிரியாக இருக்கும். இந்த நூலில் முழுக்க முழுக்க இப்படி அமைந்த உரையாடல்கள் எட்டுத் தலைப்புகளில் உள்ளன. ஒவ்வொரு தலைப்பையும் அந்தப் பொருளில் தயாரிக்கப்பட்ட தனி கலைக் களஞ்சியம் என்றே கூறலாம். படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. இலங்கைத் தமிழின் அழகு நடையை இதில் காண முடிகிறது. தாள், அச்சு, அமைப்பு எல்லாம் அருமை. ஆசிரியரின் கடுமையான உழைப்பை உணர முடிகிறது.

சிறுவர் அறிவியல் பாடல்கள் - எஸ்.எஸ். சௌந்தரராஜன் - பக். 60 - ரூ. 20 - மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராயநகர், சென்னை - 17

43 தலைப்புகளில் அமைந்தவையாக இதில் பாடல்கள் உள்ளன. அறிவியல் தலைப்பிலும் பாடல்கள் உள்ளன. பாடல்களின் சந்தம் தாளம் போட வைக்கிறது. படங்களுக்கும் குறைவில்லை.

- ரே

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual 24 U.S. Dollars, Srilanka Rs.400/-



''நான் வாங்கிக் கொடுத்த புதுப்பேனா நல்லா எழுதுதா?''

''அதுவா எங்க எழுதுது? நான்தான் கஷ்டப்பட்டு எழுதுறேன்!''

- எம்.வினோத்,
விருத்தாச்சலம்


''கோவிலுக்குப் போறதா லீவு கேட்கிறாயே, எந்தக் கோவிலுக்குப் போறே?''

''நாகர்கோவிலுக்கு சார்!''


- துரை.முருகேசன்,
காரமடை



5 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை : 1. டை 2. பெல்ட் 3. ரம்பம் 4. தாயத்து 5. கை வளையம்



இந்தப் படத்தில் என்ன தவறு?

விடை : முயலை அதன் காதுகளைப் பிடித்துதான் தூக்க வேண்டும்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 " Registered as a Newspaper in Srilanka

